பக்கங்கள் : பதின்னான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 12 வெள்ளிக்கிழமை (28.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 242

# புலிகளின் பிரதேசங்கள் மீது வான் தாக்குதல்கள் தீவிரம்!

★ மூதூரிலும் முல்லையிலும் குண்டுவீச்சு! வீடுகள் சேதம்!
★ கதிரவெளியில் ஆறு போராளிகள் சாவு! ஐவர் காயம்!
★ விமான ஓடுபாதைகளே இலக்கு என்கிறது அரசு தரப்பு

கொழும்பு, ஜூலை 28

**வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்கள் மீது ஸ்ரீலங்கா விமானப் படை வான்வழித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.**

**திருகோணமலை மூதூர், வாகரை கதிரவெளி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகள் மீது நேற்றும், நேற்றுமுன்தினமும் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சில் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுமக்களின் குடியிருப்புகள் மீதும் குண்டுகள் வீழ்ந்துள்ளன. பலர் காயமடைந்துள்ளனர்.**

**கதிரவெளியில் புலிகளின் முகாம் ஒன்று தாக்கப்பட்டதில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர் என்றும் ஐவர் படுகாயமடைந்தனர் எனவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.**

**நாட்டின் தேசியப் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிகள் அமைத்து வரும் புதிய விமான ஓடுபாதைகள் மீதே வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று அரசுத் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.**

இரு தினங்களில் நான்கு தடவைகள் நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டிருப்பது விடுதலைப் புலிகளைச் சீற்றமுற வைத்திருப்பதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

கிழக்கில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் - மாவிலாறு, வெருகல் ஆறு பிரதேசங்கள் மீது நேற்றுமுன்தினம் மாலை விமானப்படையின் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீசின. இதே பிரதேசம் மீது நேற்றுக் காலையிலும், மாலையிலும் வான் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன், வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் முல்லைத்தீவு கரையோரப் பிரதேசம் மீதும் நேற்றுக் காலை விமானங்கள் குண்டு வீசியிருக்கின்றன.

அதன் பின்னர் நேற்றுப் பிற்பகல் வாகரை கதிரவெளியில் புலிகளின் முகாம் ஒன்றின் மீதும் 'கிபீர்' விமானங்கள் குண்டு வீசித் தாக்கி இருக்கின்றன.

திருகோணமலை நகருக்கு 40 கிலோ மீற்றர் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கதிரவெளிப் பகுதி மீது நேற்று மாலையில் குண்டுகள் வீசப்பட்டன. அங்கு தங்களின் முகாம் ஒன்று தாக்குதலுக்கு இலக்கானது என்பதைப் புலிகள் ஒப்புக்கொண்டனர். அந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருச்சி சிறையிலிருந்து 2 இலங்கையர்கள் மீட்பு!

தமிழகத்தின் புதுக்கோட்டை நீதிமன்றத்திலிருந்து திருச்சி மத்திய சிறைச்சாலை நோக்கிப் பொலீஸ் பாதுகாப்புடன் கூட்டிச் செல்லப்பட்ட இலங்கையைச் சேர்ந்த கைதிகள் இருவரை ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று இடைவழியில் மறித்து மீட்டுச்சென்றிருக்கிறது. குறித்த கைதிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை பின்தொடர்ந்து வான் ஒன்றில் வந்த ஆயுததாரிகளே இவர்களை மீட்டுச் சென்றிருக்கின்றனர். போதைவஸ்து கடத்தல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறப்படும் செல்வகுமார், இம்தியாஸ் அஹமட் ஆகிய இருவருமே இவ்வாறு மீட்டுச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

## இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஐ.நா.தூதரகம் அர்ப்பணிப்புடன் செயற்படும்

### அந்த அமைப்பின் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை28

இலங்கையில் நிலவுகின்ற தேசியப் பிரச்சினையை நீக்கி அனைத்து சமூகங் களும் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழும் வகையில் நிலையான ஒரு சமாதானத்தை உருவாக்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

இவ்வாறு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஆணையாளர் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போது கூறினார். இச்சந்திப்பில் தொடர்ந்து உரையாற்றுகை [illegible] :-

பேச்சுமூலம் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்தி சமாதானத்தை நிலைநாட்ட தமிழீழ விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்நாட்டு மக்கள் அனைவரும் இன, மத பேதங்களைக் கடந்து அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி - இந்த விடயத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமே சமாதானம் உருவாவது சாத்தியப்படும்.

அமைதிப் பேச்சை மீளத் தொடங்குவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். அதேவேளை, யுத்த நிறுத்த ஒப்பந்தமும் சரியான முறையில் பேணப்பட வேண்டும். இந்த விடயங்களைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மனோகரா சந்தி அருகே கிளைமோர் வெடித்துச் சிப்பாய் பலி !

யாழ்ப்பாணம்,ஜூலை 28

யாழ். காங்கேசன்துறை வீதியில் - நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். சிவிலியன்கள் நால்வர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எதிர்ப்பட்டவர்களை வழிமறித்துத் தாக்கினர்.

காங்கேசன்துறை வீதியில் - மனோகரா சந்திக்கும் பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் - வீதிக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்தே கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை விநியோக ஊழியர் அதிகாலை குண்டுவெடிப்பில் பலி!

### புத்தூர் பகுதியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 28

புத்தூர் மேற்கில் - நவக்கிரிப் பகுதியில் - நேற்று அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற ஒரு குண்டுவெடிப்புச் சம்பவத் தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

'தினக்குரல்' பத்திரிகையின் விநியோகப் பிரிவில் பணியாற்றி வந்த இவர், பத்திரிகை விநியோகப் பணிக்காக நேற்று அதிகாலை இருள் விலகாத பொழுதில் தனது வீட்டிலிருந்து யாழ். நகருக்கு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு வந்தபோதே வழியில் குண்டு வெடிப்பில் சிக்கினார் என்று கூறப்படுகிறது.

குண்டுவெடிப்புச் சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பான ஊர்ஜிதமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் சங்க முன்னாள் தலைவர் பருத்தித்துறையில் சுட்டுக்கொலை!

பருத்தித்துறை மீனவர் சங்கம் ஒன்றின் முன்னாள் தலைவரான குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் .

பருத்தித்துறை, சுப்பர்மடம் மீனவர் சங்கத்தின் முன்னாள் தலைவரான கந்தையா சித்திவடிவேல் (வயது-54) என்பவரே சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார்.

தற்போது பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பல்களில் பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலாளியாகப் பணிபுரிந்து வந்த இவர், நேற்றுக் காலை இறங்குதுறை நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் பருத்தித்துறை அவ்வோலைப் பிள்ளையார் கோவில் வீதியில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுடப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இவரது சடலத்தின் அருகே 'தேசத்துரோகி' என்ற வாசகம் 'எல்லாளன் படை' என்ற அடிக் குறிப்புடன் காண[illegible]

([illegible])

## ராஜீவ் கொலை குறித்த புலிகளின் வருத்தம் இந்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது

### வெளியுறவுத்துறை இணை அமைச்சர் மக்களவையில் தகவல்

சென்னை,ஜூலை28

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை குறித்து விடுதலைப் புலிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர் என்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கின்றமையை இந்திய மத்திய அரசு கவனத்தில்கொண்டுள்ளதாக புதுடில்லியில் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் [illegible] தெரிவித்தார் என்று தமிழக நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் இந்தியாவின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு சமீபத்தில் வழங்கிய செவ்வியொன்றில் ''ராஜீவ்காந்தி கொலைகுறித்துப் புலிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

அவரின் இந்தக் கருத்துத் தொடர்பாக

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நெருக்கீடுகளில் இருந்து விடுபடவும்

மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வு பலம்பெறவும்

வன்முறைகள் நீங்கி வளமான வாழ்வு மலரவும்

# சர்வ மதங்களின் அமைதி நோன்புப் பிரார்த்தனை சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை28

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கீடுகளில் இருந்து மக்களை விடுபடவும் மதங்களுக்கிடையேயான புரிந்துணர்வு பலம் பெறவும் நாட்டின் வன்முறை நீங்கி வளமான வாழ்வு மலரவும் சர்வ மதங்களின் அமைதி நோன்புப் பிரார்த்தனை, யாழ். சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதான நிகழ்ச்சித் திட்டப் பிரிவினரின் ஒருங்கமைப்பில் சமயங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டு அமையம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம், நல்லை ஆதீனம், யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், யாழ். இந்து சமயப் பேரவை, தென்னிந்தியத் திருச்சபை, அகில உலக சைவக் குருமார்,சம்மேளனம், கத்தோலிக்கத் திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, யாழ்.பௌத்த நாகவிகாரை மத்தியஸ்தானம், யாழ். மாவட்ட இஸ்லாமிய உலாமாசபை ஆகிய அமைப்புகள் மேற்குறிப்பிட்ட ஒருமைப்பாட்டு அமையத்தில் அங்கம் வகிக்கின்றன.

இந்த அமையத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் சர்வமதப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு பிரம்மஸ்ரீ வே.சுப்பிரமணிய ஐயரின் வரவேற்புரையுடன் பிரார்த்தனை நிகழ்வு ஆரம்பமாகும். தொடர்ந்து நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வணக்கத்துக்குரிய யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, குரு பீடாதிபதி சிவப்பிரம்மஸ்ரீ ஐ.மகேஸ்வர சிவாச்சாரியார், நாகவிகாராதிபதி வணக்கத்துக்குரிய ஞானரத்னதேரர், மௌலவி சுபியான், சிவஸ்ரீ சோ.தண்டபாணி தேசிகர், அருட்திரு. எபநேசர் ஜோசப், அருட்திரு. எஸ்.பி.நேசகுமார், அருட்திரு. எஸ்.சி.ஆர்னல்ட் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர்.

பின்னர் வழிபாடு இடம்பெறும். இதில் முற்பகல் 10.30 மணி முதல் இந்து மதப் பிரார்த்தனையும் முற்பகல் 11.30 மணி முதல் கிறிஸ்தவ மதப் பிரார்த்தனையும், நண்பகல் 12.30 மணி முதல் இஸ்லாமியப் பிரார்த்தனையும் பிற்பகல் 1.30 மணிமுதல் பௌத்த மதப் பிரார்த்தனையும் நடைபெறும்.

வழிபாட்டைத் தொடர்ந்து அருட்திரு. கி.ஜோ.ஜெயக்குமார் சிறப்புரையாற்றுவார். நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெறும்.

இதுதொடர்பாக மையங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டு மையம் விடுத்துள்ள பகிரங்க அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போருமற்ற சமாதானமுமற்ற இன்றைய சூழ்நிலையில் பலவிதமான நெருக்கடிகளை மக்கள் சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் மக்களை ஆற்றுப்படுத்தி வாழ்வதற்கான நம்பிக்கையினை ஏற்படுத்தவேண்டிய கடமை சமயங்களுக்கு உண்டு. அந்த வகையில் தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மக்கள் விடுபடவும் நாட்டில் வன்முறை நீங்கி சகல மக்களும் சமாதானத்துடன் வாழ்வதற்கும் சர்வமதங்களுக்கிடையேயான புரிந்துணர்வு பலம்பெறவும் அமைதிவழியில் பிரார்த்திப்போமாக!

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை நீங்கி சகல மக்களும் சாந்தி சமாதானத்துடன் சுமுகமாக வாழ்வதற்காக நடைபெறவுள்ள இந்த அமைதிவழிப் பிரார்த்தனையுடன் சர்வமத வழிபாட்டுத் தலங்களிலும் நாளைய தினம் நண்பகல் வழிபாடுகளை நடத்தி இப்பிரார்த்தனை நிகழ்விற்கு சர்வமதங்களினதும் இறையருள் கிடைக்க வலுச்சேர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறோம். - என்றுள்ளது.

# இடமாற்றத்தை எதிர்த்து ஆசிரியர் மனு; மேல்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது

யாழ்ப்பாணம்,ஜூலை 28

தனக்கான இடமாற்ற உத்தரவுக்கு எதிராக ஆசிரியர் ஒருவர் யாழ்.மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது.

மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் உப அதிபராகக் கடமையாற்றி தற்போது ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்தவரான செல்லையா ஞானச்சந்திரன் என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது, மயிலணி சைவ மகாவித்தியாலயத்திற்கு அதிபர் பதவி நியமனத்தில் எனக்கு அநீதி இழைக்கப்பட்டது. இது குறித்து மேன்முறையீடு செய்தேன். இதற்குப் பழிவாங்கலாக ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டேன்.

தற்போது மயிலணி சைவ மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளவரின் விண்ணப்பத்தை சிபார்சு செய்த குபேரநாதன், மேற்படி அதிபர் தேர்வுக்குழுவில் இடம் பெற்றிருந்தார்.

53 வயதைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு அவர்களுடைய சுயவிருப்பத்தின் பேரில் அல்லாது இடமாற்றம் வழங்கப்படுவதில்லை. இதற்கு மாறாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் அதிபர் நியமனத்தை இடை நிறுத்தி உத்தரவிடுமாறும், அப்பதவிக்கு என்னை நியமிக்க உத்தரவிட்டு நிவாரணம் வழங்குமாறும் வேண்டுகின்றேன். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக - வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், வடக்கு கிழக்கு மாகணக் கல்விப் பணிப்பாளர் இ.

(13ஆம் பக்கம் பார்க்க)

# 128 ஓட்டங்களுடன் இலங்கை அணி

இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாளான நேற்று ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி இரண்டு விக்கெட்டுகள் இழப்புக்கு 128 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சங்ககார 66 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டறிகளுடன் 59 ஓட்டங்களையும் ஜெயவர்த்தன 76 பந்துகளில் 7 பவுண்டறிகளுடன் 59 ஓட்டங்களையும் பெற்று நேற்றைய ஆட்டநேரம் முடியும்வரை ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

*(முன்னர் வந்த செய்தி 10ஆம் பக்கத்தில்)*

# மன்னார் நகரில் கைக்குண்டு வீச்சு பொலீஸ் அலுவலர், யுவதி காயம்!

மன்னார்,ஜூலை 28

மன்னார் நகரப் பகுதியில் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் பொலீஸ் அலுவலர் ஒருவரும், யுவதி ஒருவரும் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9.35 மணியளவில் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில், பொது நூலகத்துக்குச் சமீபமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

மன்னார் சின்னப்பண்டிவிரிச்சான்மடுவைச் சேர்ந்த ஜே.சுதர்ஷினி (வயது - 20) மன்னார் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்துப்பிரிவு பொலீஸ் அலுவலரான ஆர்.எம்.புஸ்பகுமார (வயது - 27) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த யுவதி மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். படுகாயமடைந்த பொலீஸ் அலுவலர் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து அச்சமடைந்த நகரப் பகுதி வர்த்தகர்கள் தமது வியாபார நிலையங்களை இழுத்து மூடினர். பொது மக்களும் நகரைவிட்டு தலைதெறிக்க ஓடித்தப்பினர். பேருந்துகள் டிப்போ நோக்கிப் பறந்தன. நகரம் வெறிச்சோடியது. சிலமணிநேரம் பதற்றம் நிலவியது. பின்னர் நகர் மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பியது.

(க)

# அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை28

திருமறைக் கலாமன்றம் நடத்தும் 'சமகால தமிழக, ஐரோப்பிய அரங்கப் போக்குகள்' என்னும் தலைப்பிலான அரசியல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை திருமறைக் கலாமன்றக் கலைக் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'பிரயோக அரங்கு - அறிமுகமும் அனுபவமும்' என்னும் தலைப்பில் திருமதி றஜித்தா சாம்பிரதீபனும் 'சமகாலத் தமிழக அரங்குகள் - அனுபவப் பகிர்வு' என்ற தலைப்பில் செல்வி வைதேகி வைகுந்தநாதனும் 'ஐரோப்பிய புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலான அரங்கப் போக்குகள்' என்ற தலைப்பில் ம.சாம் பிரதீபனும் கருத்துரை வழங்கவுள்ளனர். (203)

# இராணுவத் தளபதி கடமைக்குத் திரும்பினார்

கொழும்பு,ஜூலை 28

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த செவ்வாய்க்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். கடந்த ஏப்ரல் மாதத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயமுற்ற இராணுவத் தளபதி சிங்கப்பூரில் சிகிச்சை பெறச் சென்றார்.

இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்து இரகசியப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர்களின் அறிக்கை விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டே இராணுவம் தன்து கடமைகளை ஆற்றுகின்றது என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

# கதிர்காம உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

வரலாற்றுத் தொன்மையும் புகழ்பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் ஆரம்பமானது. பஸ்நாயக்க நிலமே சசீந்திர ராஜபக்ஷ கொடியேற்ற நிகழ்வை நடத்தினார்.

இதில் பங்கேற்கவென வடக்கு - கிழக்கிலிருந்தும் பக்தர்கள் சென்றனர். அவர்களில் பலர் பாத யாத்திரையாகச் சென்றுள்ளனர். இவர்களில் வெளிநாட்டவரும் அடங்குவர்.

# சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவிலிருந்து வெளியேறுகிறது மேலக மக்கள் முன்னணி

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான புதிய அமைப்பு வரைவைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் சர்வகட்சி அரசியல் குழுவிலிருந்து வெளியேற மேலக மக்கள் முன்னணி தீர்மானித்திருக்கிறது.

''தேசிய இனப்பிரச்சினையின் அதி முக்கியத்துவத்தை திட்டமிட்டு மலினப்படுத்தி சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாத அரசியல் நிலைப்பாடுகளை முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு எம்மால் ஒருபோதும் துணைபோக முடியாது. அத்துடன், இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரத்தையும், இறைமையையும் சிங்கள தேசிய இனத்துடன் பகிர்ந்துகொள்வதற்கு தமிழ்த் தேசிய இனத்திற்கு இருக்கின்ற மறுக்க முடியாத உரிமையை கொச்சைப்படுத்தி, சர்வதேச சமூகத்தின் முன் அரசியல் நாடகத்தை கொண்டு நடத்துவதை நாம் ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. இக்காரணங்களினால் புதிய அரசமைப்பு வரைவைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இனிமேலும் தொடர்ந்து மேலக மக்கள் முன்னணி இடம்பெறாது.''

இவ்வாறு மேலக மக்கள் முன்னணியின் தலைமைக்குழுவின் முடிவை கட்சியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோகணேசன் எம்.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் எப்போதுமே சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதற்கே விரும்புகின்றார்கள். இதற்காகவே சிங்கள அரசியல் தலைமைகளுக்கு தமிழர்கள் எப்போதும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றார்கள். இந்த வரலாற்றின் அடிப்படையிலேயே மேலக மக்கள் முன்னணி சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இடம் பெற்றிருந்தது.

ஆனால், இன்று இந்தக் குழுவும், இக்குழுவுடன் இணைந்து நியமிக்கப்பட்டுள்ள வல்லுநர்கள் குழுவும் சிங்கள பௌத்த அடிப்படைவாதத்தை முன்னெடுப்பதிலேயே தீவிரம் காட்டுகின்றன.

இக்குழுவின் அங்கத்தவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளையும், வரலாற்று ரீதியாகத் தமிழ் இனத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளையும் மறந்து செயற்படுகின்றனர். நாட்டுப் பிரிவினையைத் தவிர்ப்பதற்கு தமிழர்களுக்கு அதிகாரங்கள் பிரித்து அளிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையையே இந்தக் குழு ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. தமிழர்களுக்கு தேசிய அபிலாசைகள் இருப்பதை இந்தக்குழு நடவடிக்கையில் இணைந்துள்ள கனவான்கள் நிராகரிக்கின்றார்கள்.

1796ஆம் ஆண்டு இந்நாட்டுக்கு பிரிட்டிஷார் வந்தபோது இந்நாட்டில் மூன்று இராஜ்ஜியங்கள் இருந்துள்ளன என்று இலங்கைக்கான இன்றைய பிரித்தானியத் தூதுவர் சமீபத்தில் அளித்துள்ள வாக்குமூலம் இவர்களுக்கு புரியவில்லை.

இலங்கையை இனிமேல் ஒன்று சேர்க்க முடியாது என்ற சிங்கப்பூரின் சிற்பி லீ அவர்களது கருத்து இவர்களுக்கு உறைக்கவில்லை.

தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாடுகளுக்கும் இந்தக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கின்றது. இலங்கை தேசிய இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டு சர்வதேச சமூகத்தின் முன்னால் அரசியல் நாடகம் நடத்தப்படுவதற்கு மாத்திரமே இக்குழு பயன்படுத்தப்படுகின்றது. இக்குழுவில் இடம்பெற்று நேரத்தை வீணடித்து எவரையும் திருப்திப்படுத்தும் தேவை மேலக மக்கள் முன்னணிக்கு கிடையாது - என்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# பொய்களால் உண்மைக்கு சமாதி கட்ட 'ஆசியான்' என்ற வாய்ப்பான மேடை

தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் ('ஆசியான்' அமைப்பின்) பிராந்திய குழுமக் கூட்டத்தில் (Association's Regional Forum of ASEAN) பங்குபற்றுவதற்கு இலங்கைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கையும் பங்காளராகக் கலந்து கொள்வதற்கு அனுமதிப்பது என்ற முடிவை ஆசியான் அமைப்பு எடுத்திருப்பதாக அந்த அமைப்பின் சார்பில் மலேஷிய வெளிவிவகார அமைச்சர் சயீட் ஹமீட் அல்பர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

புருணை, கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேஷியா, மியன்மார் (பர்மா), பிலிப்பீன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய பத்து தென்கிழக்காசிய நாடுகள் ஆசியான் அமைப் பில் உள்ளன.

ஆசியான் அமைப்பின் பிராந்தியக் குழுமத்தின் உறுப்புரிமை ஆசியானில் அங்கம் வகிக்கும் பத்து நாடுகள் உட்பட 26 நாடுகளுக்கு இதுவரை வழங்கப்பட்டிருந்தது. ஆசியானுடன் கலந்துரையாடல் தொடர்பை வைத்திருக்கும் இந்தப் பிராந்திய சங்கத்தில் அவுஸ்திரேலியா, கனடா, சீனா, கிழக்குத் திமோர், ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஜப்பான், மொங்கோலியா, நியூஸிலாந்து, வட கொரியா, பாகிஸ்தான், பப்புவா நியூகினி, ரஷ்யா, தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இருபத்தியாறாவது நாடாக பங்களாதேஷும் அதைத் தொடர்ந்து தற்போது 27 ஆவது நாடாக இலங்கையும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மைக் காலத்தில் மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஓடித்திரிந்ததன் பெறுபேறாகவே இந்த வாய்ப்பு இலங்கைக்குக் கிட்டியிருக்கின்றது.

பிற விடயங்களை விட, இலங்கைத் தேசிய இனப் பிரச்சினை விவகாரத்தில் - தமிழர் விடயத்தில் - விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கிழக்கு உலகிலும் இலங்கை அரசு சார்புப் பிரசாரத்தை முன்னெடுக்கவே இந்த ஆசியான் அமைப்பு ஊடான நுழைவு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

மேற்குலக நாடுகள் பலவற்றில் புலிகளுக்கு எதிராக முழு மூச்சில் பிரசாரம் நடத்தி, அதன் பயன்களை - பலாபலன்களை - பெற்றுக்கொள்ளும் இலங்கை அரசுக் கட்டமைப்பு அந்த வேலையைக் கிழக்குலக நாடுகளுக்கும் இப்போது முழு அளவில் விஸ்தரிக்க முயலுகின்றது.

புலிகளின் சர்வதேசக் கடல் போக்குவரத்து, கப்பல் நிறுவனக் கட்டமைப்பு, ஆயுதக் கொள்வனவு, ஆயுதக் கடத்தல், நிதிப் பரிமாற்றங்கள் எல்லாம் கிழக்கில் உள்ள ஆசிய நாடுகளையும் அதைச் சூழ்ந்த பிரதேசங்களையும் மையமாக வைத்தே நடைபெறுகின்றன என்று கருதும் இலங்கை அரசுத் தலைமை, அந்தச் செயற்பாட்டை உடைப்பதற்கு இந்தப் பிரதேச நாடுகளின் கட்டமைப்புக்குள் ஊடுருவிச் செயற்படுவது அவசியம் எனக் கருதி, அதற்காகத் திட்டமிட்டுப் பணியாற்றுகிறது.

அதன் பெறுபேறாகவே ஆசியான் அமைப்பின் பிராந்தியக் குழுமக் கூட்டத்துக்குள் நுழையும் வாய்ப்பு இலங்கைக்குக் கிட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆசியான் அமைப்பு ஒருபுறமிருக்க, ஆசியானின் பிராந்தியக் குழுமக் கூட்டம் வேறு விதமானது. அந்தக் கூட்டம் ஆசியானைப் போல தீர்மானங்கள் எடுத்து முடிவுகளை நடைமுறைப்படுத்துகின்ற கட்டமைப்பு அல்ல. பிராந்தியக் குழுமக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஆசியான் நாடுகளுடன் சேர்ந்து தங்களது பிராந்திய அரசியல், சர்வதேச உறவுகள், தொடர்பாடல்கள் குறித்து பகிரங்கமாகத் தங்களுக்குள் கருத்துப் பரிமாறவும், கருத்துக்களை முன்வைக்கவும் வாய்ப்பான ஓர் அரங்கே இந்தப் பிராந்தியக் குழுமம் ஆகும்.

புலிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்திரித்துத் தான் மேற்கொள்ளும் பிரசாரம் கிழக்குலகுக்குச் சரியாகப் பதியப் பொருத்தமான அரங்கு இந்தப் பிராந்தியக் குழுமம்தான் என்று கருதி காய்களை நகர்த்தியிருக்கின்றது இலங்கை.

இனி அங்கு நடைபெறும் கூட்டங்களிலும், அமர்வுகளிலும் தனது புலி எதிர்ப்புப் பிரசாரத்தை இலங்கை முழு அளவில் முன்னெடுக்கும். இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு - தமிழர்களுக்கு நியாயம் செய்வதற்கு - தன்னால் இயன்ற அனைத்தையும் வெட்டிப் பிடுங்கித் தான் ஆற்றி வருவதாக அது கதை அளக்கும். இலங்கை இனப் பிரச்சினை விவகாரம் தொடர்பான யதார்த்தமான உண்மைகளை பொய்களால் மூடி மறைத்து சமாதி கட்டி, புனை கதைக் கட்டுமானத்தைப் பெரும் கோட்டை போல ஸ்தாபிப்பதற்கு இலங்கை அரசுத் தரப்புக்கு கிழக்குலகிலும் பொருத்தமான மேடை கிடைத்திருக்கின்றது.

அரசுக் கட்டமைப்பு என்ற வழியைப் பெற்றிராத தமிழர் தரப்புக்கு இத்தகைய பொய்ப் பிரசாரங்களை அம்பலப்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகள், அரங்குகள், மேடைகள் குறைவு. இருந்தாலும்கூட வெளிநாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களின் அமைப்புகள், நிறுவனங்கள் ஆசியான் ஊடான இலங்கையின் ஊடுருவலைச் சரியாக அடையாளம் கண்டு, உரிய எதிர்ப்பிரசாரங்களை முன்னெடுக்கத் தம்மால் இயன்றவரை தயாராக வேண்டும்.

தமிழர் தாயகத்தில் தென்னிலங்கைச் சிங்கள அரசு காலங் காலமாகத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்களையும், அடிப்படை உரிமை மறுப்புக்களையும், அடக்கு முறைகளையும், நெருக்குவாரங்களையும் உரிய முறையில் அம்பலப்படுத்துவதன் மூலம் தென்னிலங்கை அரசு சர்வதேச ரீதியில் முன்னெடுக்கும் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்க முடியும்.

# வடமராட்சியில் வீடமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இரண்டரைக் கோடி ரூபா மீளத்திரும்பும் நிலை

யாழ்ப்பாணம், ஜூலை28

பருத்தித்துறை பிரதேசத்தில் சுனாமி அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த குடும்பங்களுக்கு வழங்க வேண்டிய இரண்டாம் கட்ட கொடுப்பனவான இரண்டு கோடி 50 லட்சம் ரூபா மீளத் திரும்பிச் செல்லும் அபாய நிலை உள்ளதாக அறியவருகின்றது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு - கிழக்கு சுனாமி வீடு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேசத்தில் ஆயிரத்து 951 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இப் பயனாளிகளுக்கு முதல் கட்டக் கொடுப்பனவாகத் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வீடு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதல் கட்ட கட்டட வேலைகள் பூர்த்தி செய்த ஆயிரத்து 530 பயனாளிகள் இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக தலா 60 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுள்ளனர்.

மிகுதி 421 பயனாளிகளும் இதுவரை இக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளாததால் கொடுப்பனவுத் தொகை திரும்பிச்செல்ல நேரிடலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்ட வேலையினைப் பூர்த்தி செய்து இதுவரை இரண்டாம் கட்டக் கொடுப்பனவினைப் பெறாத பயனாளிகள் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் தமது கொடுப்பனவின்னைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கேட்டுள்ளார்.

மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்க நிதி வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (1-117)

# அனலைதீவு ஆலய திருவிழாவையொட்டி விசேட படகுச் சேவைக்கு ஏற்பாடு

நல்லூர், ஜூலை28

அனலைதீவு நயினா குளம் கூழாவடியுறை ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார் ஆலய பெருந்திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களின் நலன்கருதி விசேட படகுச்சேவை நடத்தப்படவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இந்த ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த உற்சவங்களில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்காக ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறைமுகத்திலிருந்து காலை 9 மணிக்கும், அனலைதீவில் இருந்து பிற்பகல் 2 மணிக்கும் விசேட படகுச்சேவைகள் நடத்தப்படவுள்ளன.

அத்துடன் உற்சவ தினங்களில் அன்னதானமும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பரிபாலன சபையினர் மேலும் தெரிவித்தனர். (1-204-111)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையே சிறந்தது

## ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, ஜூலை28

இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையே சிறந்த பரிகாரம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையே சிறந்த பரிகாரம்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியாவால் அனைத்து சாதகமான வழிகளிலும் உதவமுடியும். விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரவும் அதனால் முடியும்.

போருக்குச் செல்வதில் எமக்கு விருப்பம் இல்லை. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் கருத்தை அறிந்து கொள்ளவும் அவர்களுடன் இணைந்து செயலாற்றவும் தயாராக உள்ளோம்.

எனினும் பிரபாகரன் என்னைச் சந்திப்பதற்குத் தயாரில்லை. பிரபாகரன் இலங்கைக்கு வெளியில் உள்ள ஒருவர் அல்ல. அவரும் இலங்கையரே - என்றார் அவர். (1-204)

## சுவாமிகளின் திருவுடல் அக்கினியுடன் கலந்தது

யாழ்ப்பாணம், ஜூலை28

கடந்த செவ்வாயன்று சிவபதம் அடைந்த கந்தர்மடம் சிவகுருநாத பீடம் மகா தேச ஆசிரம குரு பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் திருவுடல் நேற்றுமுன்தினம் கோம்பையன் மணல் மயானத்தில் அக்கினியுடன் இரண்டறக் கலந் தது.

சுவாமிகளின் திருவுடல் மகாதேவ ஆச்சிரமத்தில் பக்தர்களின் அஞ்சலியைத் தொடர்ந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆரவாரமற்ற அமைதியான ஆச்சிரம நிகழ்வில் தேவார திருவாசகங்கள் ஓதப்பெற்றதுடன் சுவாமிகளின் பக்தர்கள் ஆண்களும் பெண்களும் திரளாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். (ப)

# தென்மராட்சியில் பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

தென்மராட்சி கிழக்கு, ஜூலை28

தென்மராட்சிப் பிரதேசத்தில் பால் உற்பத்தியை ஊக்குவிக்கவும் அதற்கு சந்தை வாய்ப்பை பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் தெரிவித்தார்.

தென்மராட்சியில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர் பாலைச் சந்தைப்படுத்த பெரும் சிரமம் அடைகின்றனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனால் பால் உற்பத்தியில் ஆர்வம் காட்டாது விடுகின்றனர்.

பாலில் இருந்து பல சுவையான பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். கால்நடை வளர்ப்போர் சங்கம் மற்றும் பொது அமைப்புகள் பால் உற்பத்திப் பொருள் தயாரித்து சந்தைப் படுத்தும் திட்டங்களை சமர்ப்பித்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர். (1-204)

# பதில் அதிபர்களுக்கான பதவி உயர்வுகள் இனிமேல் போட்டிப் பரீட்சைகள் மூலம்!

பதில் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் நிரந்தர நியமனம்பெற இலங்கை அதிபர் சேவை நியமனம் தொடர்பாக நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றி சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு பதில் அதிபர்களாக கடமையாற்றிய காலப் பகுதிக்கு விசேட புள்ளி வழங்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் பதில் அதிபர்களாக கடமையாற்றியவர்களுக்கு பாடசாலையின் தரத்திற்கு ஏற்ப நேர்முகப் பரீட்சையை மட்டும் கருத்திற்கொண்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டன.

இந்தமுறை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போதுதான் பதில் அதிபர் சேவை கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்போது, போட்டிப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான நிபந்தனை அமைச்சரவை அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டு, அந்தவகையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கல்வி அமைச்சு பதில் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்களில் 3 ஆயிரத்து 500 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

அதிபர் சேவை தரம் 2:II பதவிக்கான நியமனம் வழங்குவதற்கான பரீட்சையும் அதிபர் சேவை 3 பதவிக்கான போட்டிப் பரீட்சையும் தனித் தனியாக நடத்தப்பட்டு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (1-11)

# பல்கலை மாணவர்களுக்கான உதவுதொகை 500 ரூபாவால் அதிகரிக்க இணக்கம்

கொழும்பு, ஜூலை28

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவு தொகையை 500 ரூபாவால் அதிகரிக்க நிதிஒதுக்கீடு செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார் என சுதந்திரக் கட்சியின் மாணவர் அமைப்பு செயலாளர் டீ.கே.டீ.திஸநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழக மாணவர்களின் உதவித் தொகை 500 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுதவிர நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுவரும் அறிவு வளர்ச்சி மையங்களை சகல பல்கலைக்கழகங்களிலும் நிறுவி தகவல் தொழில்நுட்பத்தை இலவசமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கவும் -

வர்த்தக சந்தையில் வேலை வாய்ப்புகளை பெறும் நோக்கை அடிப்படையாகக் கொண்ட புதிய பாடத்திட்டங்களை பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கவும் - ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (1-206)

## நாளை

ஆடி 13
சனிக்கிழமை
29.07.2006
திதி : சதுர்த்தி
மாலை : 05.08
நட்சத்திரம் : பூரம்
முற்பகல் : 10.35
[illegible]
[illegible]

## உதயவாக்கு

மக்கள் சமுதாயத்தில் ஐந்தில் ஒரு பிரிவினர் எல்லாவற்றையும் எல்லா சமயங்களிலும் எதிர்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். - நொபேர்ட் ஹென்னடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from siutably qualified persons for the under mentioned posts up to 08.08.2006

### Faculty of Arts

Assistant Lecturer (on contract) in
Archeology / Hindu Philosophy / Political Science/ Sociology/ Anthropology/ Philosophy/ Linguistics/ Education (Social Science)/ Christian Civilization/ Tamil.

### Faculty of Management Studies & Commerce

Assistant Lecturer (on contract) in
Business Administration / Commerce
Visiting Lecturer in Business and Corporate Law

### Sports Science Unit

Visiting Lecturer in
General Theory & Methods of Training / Soccer / Volleyball/ Badminton/ Cricket / Table Tennis
Visiting Instructor in Volleyball

**Salary:**
Assistant Lecturer (on contract) Rs.16870/- per month (fixed) (other allowances approved by University Grants Commission will also be paid)

Fees for Visiting appoinment
I. Visiting Lecturer (Undergraduate Course) Rs.500/- per hour for lectures
II. Visiting Lecturer (Pre-University Course) Rs.300/- per hour for lectures
III. Visiting Instructor (Pre-University Course) Rs.150/- per practical

**Note: Candidates who are awaiting the final result of their Degree programme may also apply for the post of Assistant Lecturer (on contract).**

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should apply in separate application forms.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation.

Only applicants, short - listed based on their qualifications and eligibility will be called for an interview.

(C/50542)

**REGISTRAR**
**2006.07.27**

# Invitation for Bids (IFB)

Save the Children in Sri Lanka

**Tsunami affected school building Construction – Jaffna District**

1. The Managing Director, resource Development consultants Ltd on behalf of Save the Children in Srilanka, 58A,Horton place Colombo-07, shall receive sealed tenders from eligible construction contractors for the construction of two storey school buildings in the following schools,
   1. J/Thondamanaru MV
   2. J/Puttalai MV
   3. J/Shantha thoddam
2. All bidders should have been registered with the Institute for Construction Training and Development (ICTAD), under the grade and specialty given below and shall hold a valid membership of the National Construction Association of Srilanka (NCASL).Tender documents will be issued only to candidates who provide proof of their registration.
   1. ICTAD Registration required: Grade : M.6 or above
   2. Specialty : Building construction
   3. A tenderer is not allowed to bid for more than one building
3. The Bid documents for the above services could be obtained from the Engineer , Save the children in Srilanka , Jaffna office , 146,Temple Road , Nallur up to 1.00 hrs on 02.08.2006 on payment of a non refundable Bid fee of rupees 2000/=.
4. Sealed completed tender documents marked on cover as school building construction, and delivered to Save the children in Srilanka , Jaffna office. Dead line for submission date extended up to 7/08/2006,3PM.
5. For further details or clarification, Bidders may contract Eng. Mr.Sivasubramaniyam Save the children in Srilanka ,Jaffna Telephone no.021 222 5078
6. This contract is exempted from VAT.
7. Those who have collected the tender forms need not collect again.

**Construction Manager,**
**Save the children in Srilanka,**
**146,Temple Road. Jaffna.**

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 201316066 முதல் 201332348 வரை. சீட்டிழுப்பு இல. 1730 திகதி 26-07-2006

வெற்றி எண்கள் **11 16 37 41** சுப்பர் இல. **05**

ஜக்பொட் பரிசு ரூ. **5,108,250/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இல. + சுப்பர் இல. | 0 | 5,108,250/- | - |
| 4 இல. | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 3 இல. + சுப்பர் இல. | 23 | 5,000/- | 115,000/- |
| 3 இல. | 437 | 1,000/- | 437,000/- |
| 2 இல. + சுப்பர் இல. | 1388 | 500/- | 694,000/- |
| 2 இல. | 21044 | 40/- | 841,760/- |
| 1 இல. + சுப்பர் இல. | 19994 | 20/- | 399,880/- |
| 1 இல. | 298135 | 10/- | 2,981,350/- |
| மொத்தம் | | | 7,468,990/- |
| தங்க நகை, கதவல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் பெறுமதி | 5 | 120,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 341,028 | | 8,068,990/- |

ரூ. 120,000 பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிளை வெற்றி பெற்ற 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 201316607-0-97 |
| காலி | 201325779-6-66 |
| மொணராகலை | 201327531-0-55 |
| கேகாலை | 201319861-6-71 |
| கம்பஹா | 201329505-5-96 |

தொடர் இல. 101253536 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2006 ஜூலை 29 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 5,905,600/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செர் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

# சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை28

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ச.சிவனேஸ்வரனின் சேவைத்திறன் நயப்பு விழா நாளை சனிக் கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரி யின் பிரதான மண்டபத்தில் கல் லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை கல்லூரி பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசா நிகழ்த்து வார்.

வாழ்த்துரைகளை வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர் க.கந்தசாமி, வலிகாமம் வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதய நாதன், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், கல்லூரி யின் முன்னாள் பிரதி அதிபர் ச.கந்தசாமி, சிரேஷ்ட மாணவர் தலைவர் த.சிவதர்சன், சிரேஷ்ட ஆசிரியர் திருமதி தில்லையம் பலம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து விழா நாயகன் ச.சிவனேஸ் வரனுக்கு கல்லூரி சமூகச் சேவைத் திறன் கௌரவிப் பினை வழங்கும்.

(13-204)

# சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

அரியாலை,ஜூலை28

நீர்வேலி தெற்குப் பகுதியில் சட்ட விரோத மின்சாரப் பாவனை அதிகரித் துள்ளது. இதனால் ஏனையவர்களுக் கும் வலுக்குறைந்த மின்சாரமே கிடைப் பதாக விசனம் தெரி விக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் பகல் - இரவு தொடர்ச்சியாகப் பலர் சட்டவிரோத மின்சாரம் பெறு கின்றனர். இதனால் வலுக்குறைந்த மின்சாரம் கிடைப் பதுடன், அடிக்கடி மின்தடையும் ஏற் படுகிறது.

உரியவர்கள் இதற்குத் தகுந்த நட வடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(204-17)

# மணிவிழா வாழ்த்து



அகவை அறுபது எய்தி இன்று
மணிவிழாக் காணும்
'சமூகஜோதி' ஸ்ரீமான்
**த.பரராஜசிங்கம் (J.P)**
அவர்கள்

நாவலனே! மணிவிழா காண்பவனே! காமாக்ஷி
தேவிதனை தினம் தொழுதிடும் - பாவலனே!
நல்பரராஜ சிங்கமே நாளும் வளம்பெற்று
செல்வமொடு வாழ்க செழித்து

நீர்வை ஸ்ரீ காமாட்க்ஷி அம்பாளருளால் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு எய்தப் பிரார்த்திக்கின்றோம்.

கருணைமிகு காமாட்க்ஷி அம்பாள் தேவஸ்தானம், நீர்வேலி.

ஆலய பிரதம குருவும், அம்பிகை அடியார்களும்.

(21.11.45)

# அறுபதாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபையின் காப்பாளரும் காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை அதிபருமாகிய மதிப்பிற்குரிய
'சமூகஜோதி'
**திரு.த.பரராஜசிங்கம்** (சமாதானநீதிவான்)

அவர்கள் இன்று *(28.07.2006)* அகவை அறுபதை அடைவதையிட்டு மனமார வாழ்த்துவதோடு, குடும்பத்தோடும் குவலயத்தோடும் இன்புற்று பல்லாண்டு வாழ நல்வாழ்த்துக்கூறி காமாட்சித் தாயைப் பிரார்த்திக்கின்றோம்

(52659)
(21.11.45)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

வாழ்த்துவோர்:
**காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபையினர்.**

# தொழில் வாய்ப்புடன் உயர்கல்வி

Singapore, Malaysia, Australia போன்ற நாடுகளில் Hotal Management, Accounting, Com.Science, Travell & Tourisum கற்கைகள் தொடர்வது சம்பந்தமான இலவச ஆலோசனைகளுக்கு பல வருட அனுபவம் கொண்ட ஆலோசகரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

- G.C.E (O/L) சித்தி போதுமானது
- தொழில் வாய்ப்புடன் Hotal முகாமைத்துவம் (சம்பளம் 36, 000/-)

விவரங்களுக்கு இல.561, கஸ்தூரியார் வீதியில் உள்ள Spider Games Spot இல் உள்ள எமது அலுவலகத்தை (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அருகில்) சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்ளவும்.தொலைபேசி மூலம் நேர ஒதுக்கீடு செய்வது விரும்பத்தக்கது. விவரங்களுக்கு - 0773256575

(52652) (21.11.45)

வேலணை
பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய
வியவருஷ - 2006

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

**ஆலய வருடாந்த மஹோற்சவம்**
**எதிர்வரும் 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை**
**கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.**

| | |
|---|---|
| கொடியேற்றம் | 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை பகல் - 10 மணி |
| தீ மிதிப்பு திருவிழா | 06.08.2006 ஞாயிற்றுக்கிழமை மாலை - 5 மணி |
| சப்பரத் திருவிழா | 07.08.2006 திங்கட்கிழமை மாலை |
| தேர்த்திருவிழா | 08.08.2006 செவ்வாய்க்கிழமை தேரில் சுவாமி எழுந்தருளல் காலை - 9 மணி |
| தீர்த்தத் திருவிழா | 09.08.2006 புதன்கிழமை |

*உற்சவகாலங்களில் அன்னதானம் வழங்க அன்னதான சபையினர் ஒழுங்குகளைச் செய்துள்ளனர்*

**- பரிபாலனசபையினர்.**

*வேலணை.* (52664)(21.11.45)

# மரண அறிவித்தல்

## முருகர் தாமோதரம்பிள்ளை

**(ஓய்வுபெற்ற கொள்வனவு முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.ச.)**

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் தாமோதரம்பிள்ளை அவர்கள் 26.07.2006 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவஞானம் அவர்களின் அன்புக் கணவரும் முருகர் - வள்ளியம்மை தம்பதியரின் மகனும், பரமேஸ்வரி, நாகேஸ்வரி, பாலகிருஸ்ணன் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), ஈஸ்வரி (லண்டன்), கதிர்காமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவயோகராசா, காலஞ்சென்ற தியாகராசா, உமாதேவி, சுகிர்தா, மோகனராசா, லீலாவதி ஆகியோரின் மாமனும் செல்லம்மா, வைத்திலிங்கம், ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.07.2006) வியாழக் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

தகவல்
**மனைவி, பிள்ளைகள்.**

(52656)(21.11.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம், கடற்றொழில் தேவைக்கு அரை லீற்றர் பெற்றோல் போத்தலில் பெறலாம்

அரியாலை,ஜூலை28

விவசாயம் மற்றும் கடற்றொழில் தேவைக்கென அரை லீற்றர் பெற்றோலை நிரப்பு நிலையங்களிலிருந்து போத்தல்களில் பெற்றுக்கொள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் அனுமதி அளித்துள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் குடாநாட்டில் உள்ள சகல எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

விவசாயம், கடற்றொழில் மற்றும் மோட்டார் இயந்திர திருத்துநர் போன்றோர் தமது தேவைகளுக்காகத் தத்தம் கிராம சேவையாளரின் சிபார்சுக் கடிதத்துடன் அரை லீற்றருக்கு மேற்படாத பெற்றோலை போத்தலில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுற்றறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த மாதம் தொடக்கம் பெற்றோல் வெற்றுக் கான்களில் நிரப்பி விநியோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ம-17)

# பாவனைக்குதவாத இறைச்சி விற்ற மூன்று வர்த்தகர்களுக்கு தண்டனை

யாழ்ப்பாணம்,ஜூலை28

சட்டவிரோதமாக வெட்டப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத 70 கிலோக்கிராம் மாட்டிறைச்சி யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி சின்னக் கடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே மூன்று கடைகளிலிருந்து பாவனைக்குதவாத இறைச்சி கைப்பற்றப்பட்டது.

அனுமதியற்ற இந்தச் செயலுக்காக இம் மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஒவ்வொருவருக்கும் தண்டப் பணமாக ரூபா மூவாயிரமும் தர்மப் பணமாக ரூபா மூவாயிரமும் விதிக்கப்பட்டன. சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படும் இறைச்சிகளைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் மக்களைக் கேட்டுள்ளார். (1-ரி)

# தென்மராட்சியில் பிறப்புப்பதிவு நாளை

தென்மராட்சி,ஜூலை28

தென்மராட்சிப் பிரதேசத்தில் பிறப்புப் பதிவினை இதுவரை மேற்கொள்ளாதவர்களுக்கு பிறப்புப் பதிவு செய்வதற்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

காலங்கடந்த பிறப்புத் தொடர்பான பதிவுகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்கொள்ளப்படும்.

இதுவரை பிறப்புப் பதிவுகள் மேற்கொள்ளாதவர்கள் போதிய ஆதாரங்களுடன் வருகை தருமாறு கழகத் தலவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் கேட்டுள்ளார். (1-117)

# நல்லூர் ஆலயச் சூழலில் மூடப்படும் பாதைகளின் விவரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாம்,ஜூலை28

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு குறிப்பிட்ட சில வீதிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 24ஆம் திகதிவரை வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆணையாளர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதி, பிரமாணக்கட்டுக் குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட கோயில் வீதி, செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம் வரை உள்ள வீதிகளே போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும்.

பஸ்கள், சிற்றூர்திகள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி, முத்திரைச் சந்தியூடாகச் செல்ல வேண்டும்.

பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதி வழியாக பஸ்களும் சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்களின் வசதிகருதி முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியிலும், கந்தர்மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியிலும், அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியிலும், செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பாலும் வாகனத் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டிருக்கும் - என அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

# நல்லூர் உற்சவகாலத்தில் சொற்பொழிவும் பிரார்த்தனையும்

யாழ்ப்பாணம்,ஜூலை28

நல்லூர் பெருந்திருவிழாவினையொட்டி இந்து சமய கலாசார திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் ஆன்மீகச் சொற்பொழிவும் நடத்தப்படவுள்ளன.

திருவிழாக் காலங்களில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை இந் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்து கலாசார திணைக்களத்தால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்படுகின்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் ஆன்மீகச் சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகளுமே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ம-13)

# வடமராட்சி கிழக்கில் இலவச வகுப்புகள்

வடமராட்சி கிழக்கு,ஜூலை28

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் மருதங்கேணியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச கணனிப் பயிற்சி வகுப்புக்களை நடத்த முன்வந்துள்ளது.

ஏற்கனவே, பாடசாலைகளை விட்டு வெளியேறிய ஒரு தொகுதியினருக்கான பயிற்சி வகுப்புகள் பூர்த்திசெய்யப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இப்பிரதேசத்தில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் இலவச பிரத்தியேக வகுப்புக்களை நடத்தவும் இந்த நிறுவனம் முன்வந்துள்ளது. (182)

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூலை28

புதிதாக நியமனம் பெற்ற முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த 24ஆம் திகதி முதல் யாழ்.செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர்கள் பங்குபற்றி வருகின்றனர். (ம-13)

# சமய சந்நிதிகளில்

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஆடிப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது. பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மாலை அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (1-28)

* * *

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வரலக்சுமி பூசை எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலாவரும் நிகழ்வும், காப்புக் கட்டுதலும் நடைபெறும். (1-204-15)

* * *

யாழ்.வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் நடைபெறவுள்ளது.காலை 7 மணிக்கு ஸ்நபனா அபிஷேகத்துடன் உற்சவம் ஆரம்பமாகும். (1-203)

* * *

அனலைதீவு நயினகுளம் கூழாவடியுறை ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவீதியுலாவும் மறுநாள் 9ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (1-111)

* * *

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய தேவிவாசல் பெருந்திருவிழாவில் தீர்த்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. பிற்பகல் 4 மணிக்கு துவஜ அவரோகணம், விசேட பூசைகள் என்பன இடம்பெறும். (1-204)

* * *

கந்தரோடை வீரகத்தி விநாயகர் திருக்கோயில் அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் தினமும் முற்பகல் 10 மணிக்கு விசேட பூசை அபிஷேகமும், பிற்பகல் 5 மணிக்கு கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (1-204)

* * *

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய நவநாள் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூஜையும் நடைபெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் பாடல்பலி பூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். நவநாள் ஆராதனைகளை பங்குத் தந்தை அருட் திரு யூட் அமலதாஸ் அடிகள் நடத்துவார். (204-117)

* * *

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு கொடியிறக்கம் இடம்பெறும். (1-204)

* * *

மானிப்பாய் புனித அன்னாள் தேவாலய பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 5மணிக்கு நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு பெருவிழாத் திருப்பலி, திருச்சொரூப பவனி, சொரூப ஆசீர் என்பனவும் இடம்பெறும். (1-204)

* * *

பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிறு காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (1-30)

* * *

வட்டு.கிழக்கு - துறட்டிப்பனை முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பதினொரு தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 8ஆம் திகதி முற்பகல் 10.30மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (1-204)

* * *

அளவெட்டி தெற்கு - வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திரு விழா நாளைமறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. 11தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (1-204)

* * *

திருநெல்வேலி படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் ஞான துர்க்கா அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் 9ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் திருவிழா நிறைவடையும். (203)

* * *

ஏழாலை தெற்கு வசந்த நாகபூசனி அம்பாள் ஆலய வரலக்ஷ்மி பூஜை எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட பூஜையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (202)

* * *

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பெருந்திருவிழா அடுத்த மாதம் 23ஆம் திகதி நள்ளிரவு 1.40 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாள் 7ஆம் திகதியும் இடம்பெறும். (204)

* * *

புலோலி உபயகதிர்காமம் தான்தோன்றி சக்கர சண்முகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தின் சப்பரத் திருவிழா அடுத்த மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமையும் தேர்த் திருவிழா மறுநாளான 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்தத் திருவிழா அதற்கு அடுத்த நாள் 9ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். (1-173)

* * *

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாளான 9ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவுறும். (1-173)

* * *

மண்டைதீவு சம்பேதுரு, சம்பாவிலு ஆலயபெருந் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நன்மைத் திருப்பலியும், மறுநாள் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் மாலை 4.30 மணிக்கு புனிதரின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். திருச்சொரூபப் பவனி வழமையான வீதி வழியாகவே நடைபெறும் என பங்குத் தந்தை அமலராஜன் அடிகளார் தெரிவித்துள்ளர். (1-202)

* * *

கோப்பாய் மத்தி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்த பெருந்திருவிழாவில் இன்று வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவம் இடம்பெறவுள்ளது.(1-15)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation

Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626

Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519

Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
021 2223984
Fax: 021 222 5600

Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979

New way of Flying


யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்

## யாழ்.வண்ணை - ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

ஸ்ரீ ஆண்டாள் பூர்வகர்ம உற்சவம் (ஆடிப்பூரம்) - 28.07.2006

நிகழும் விய வருடம் ஆடி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப.10.15 மணிக்கு ஆண்டாள் பூர்வகர்ம உற்சவம் நடைபெறும். அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமந் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

-ஆதீன மகாசபை.

(சி/50312)(32.17.15.26)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 10 - 1919



மறைவு 08 - 08 - 2005

### அமரர் சின்னையா செல்வரத்தினம்

பாசத்தின் பிறப்பிடமாய் நேசத்தின் உறைவிடமாய்
இப்பார் தனிலே வாழ்ந்து எம்மை பண்பாக வளர்த்த - தாயே!
நீங்கள் எம்மைவிட்டுச் சென்று ஓராண்டேன்ன
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
சி.கனகரத்தினம் (மகன்)
கதிர்வேலவன் அரிசியாலை,
கைதடி கிழக்கு.

(52629)(32.17.15.26)



## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நாகராசா (J.P)



வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தாமரை வீதி, வண்ணார்பண்ணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகராசா அவர்கள் 25-07-2006 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் இராசாத்திஅம்மாவின் (முன்னாள் அதிபர், வண்/ ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாசாலை) அன்புக் கணவரும் ம.நாகேஸ்வரிஅம்மா, சி.செல்வதிஅம்மா, சு.சிவகுருநாதன் (முன்னாள் இ.போ.ச.சா. மு/ பிராந்திய உதவிப் பாதுகாப்பு உத்தியோகத்தர்), சு.வள்ளிநாயகி, கி.தெய்வநாயகி (UK) ஆகியோரின் சகோதரரும் க.பரராசசிங்கத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (29-07-2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமரை வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு.

தகவல்:
திருமதி இராசாத்திஅம்மா நாகராசா (மனைவி).

(52627)(26.17.15)


# நிதி ஒதுக்கியும் வீதி திருத்தமில்லை

வடமராட்சி,ஜூலை28

மருதங்கேணி நாவலடிச் சந்தியிலிருந்து உடுத்துறைவரை செல்லும் வீதியை புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இன்னும் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் சிரமத்துடன் மக்கள் பயணம் செய்வதைக் காண முடிகிறது.

இந்த வீதி திருத்தம் செய்வதற்கு தொண்டு நிறுவனம் ஒன்று நிதி ஒதுக்கீடு செய்து வேலையை ஒப்பந்தகாரரிடம் கையளித்திருந்தது.

பல மாதங்கள் கடந்தும் இந்த வீதிப் புனரமைப்புக்கான வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மழைகாலம் ஆரம்பிக்கும் முன்னராவது வீதித்திருத்தத்தை மேற்கொள்ள உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(204-182)

# லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு வைபவங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை28

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆனைக்கோட்டை துரைராஜா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கே.தணிகாசலம், கௌரவவிருந்தினராக லயன் ரி.அன்பானந்தன், சிறப்பு விருந்தினராக லயன் எஸ்.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (204-185)

* * *

வடமராட்சி,ஜூலை28

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய உத்தியோகத்தர் பதவியேற்பு வைபவம் அண்மையில் பருத்தித்துறை ஓராங்கட்டையிலுள்ள துரை இல்லத்தில் நடைபெற்றது.

இவ்வாண்டுக்கான தலைவராக இளைப்பாறிய கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக் களப்பணிப்பாளர் டாக்டர் எம்.தங்கராசாவும், செயலாளராக பொறியியலாளர் லயன் எஸ்.தவச்செல்வாவும் பொருளாளராக இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் லயன் என்.சோமசுந்தரமும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

(204-117)

# வர்த்தக விஞ்ஞானப் போட்டி

தென்மராட்சி,ஜூலை28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான வலய மட்ட வர்த்தக விஞ்ஞானப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டியாளர்களுடன் பாடசாலைகளில் வர்த்தக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் போட்டி நடைபெறும் இடத்திற்கு சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(204-117)

# கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பதினாறு வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை28

குடாநாட்டில் 'மகாநெகும' கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பதினாறு வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

புனரமைப்புச் செய்யப்படவுள்ள வீதிகளின் பெயர் விவரம் வருமாறு:

சாவகச்சேரி நகரசபை - பொருங்குளம் பிள்ளையார் வீதி, சாவகச்சேரி பிரதேச சபை - பெருவெட்டி வீதி, வலி.கிழக்கு பிரதேச சபை - கவிஞர் காசி ஆனந்தன் வீதி, வலி.கிழக்கு பிரதேச சபை - பேக்கரி வீதி, சாவகச்சேரி பிரதேச சபை - ஊரியாப்பிட்டி வீதி, வலி.தெற்கு பிரதேச சபை - இணுவில் தாவடி எல்லைவீதி, வலி.வடக்கு பிரதேசசபை- நாதோலை வீதி, வலி.மேற்கு பிரதேச சபை- கேணிக் கடவை வீதி, வேலணை பிரதேச சபை -சிற்பனை வீதி, வல்வெட்டித்துறை நகர சபை- வாவினி வீதி, வலி. தென்மேற்கு, பிரதேச சபை - சாவற்கட்டு அமெ.மிசன் வீதி, நல்லூர் பிரதேச சபை- அம்பக்கர் தெற்கு வீதி, ஊர்காவற்றுறை பிரதேசசபை - சென்ற் . அன்ரனீஸ் வீதி, காரைநகர் பிரதேச சபை - பொன்னாவளை வீதி, வட.தென்மேற்கு பிரதேச சபை - வெள்ளெருவை வைரவர் வீதி, செம்பாரு வீதி.

(204-185)


ACCPAC, MYOB, Tally, Quick Books Premier

Diploma in Office Management

Free Study Pack! Duration 2 Months

அனுபவம் மிக்க விரிவுரையாளரினால் உயர்தர,பல்கலைக்கழக,தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கென நடைபெறுகின்றது!

பிரிவு 1: 29.07.2006 காலை 9.00 மணி
பிரிவு 11: 30.07.2006 காலை 9.00 மணி

CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.



சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



### திரு.முதலி சிவம்

உதவிக் கல்விப் பணிப்பாளர்
(முறைசாராக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்

சேவை விவரம்
ஆசிரிய சேவை:
13.08.1975 - 31.01.1987
முதன்மை ஆசிரியர்:
01.02.1987 - 18.05.2002
உதவிக் கல்விப்பணிப்பாளர் :
19.05.2002 - 27.07.2006

முறைசாராக் கல்வியின் மூலம் மாணவர்களின் வாண்மை விருத்திக்காக அரும்பணியாற்றி ஒய்வுபெறும் நண்பனை பல்லாண்டு காலம் பல்சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

நண்பர்கள்,
கல்வி அபிவிருத்தி முகாமைத்துவப் பிரிவு,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(52613)(32.17.15.26)



# STUDY IN INDIA

K. L. College of Engineering affiliated to
Acharya Nagarjuna UNIVERSITY (Andra Pradesh)

| ENGINEERING COURSES | DURATION | G.C.E (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Science &Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science & Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics & Communication Eng | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Civil Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Industrial & Production Eng. | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electrical & Electronics Eng | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electrical & Computer Eng. | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |

Muthayammal College of Arts & Science
affiliated to Periyar UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc (Computer Science) | 3 Year | Math, Physics & Statistics |
| B.Sc (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc (Biotechnology) | 3 Year | Chemistry, Physics & Biology |
| BCA (Bachelor of Computer Applications) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM (Bachelor of Business Mang'nt) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM (Bachelor in Hotel Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.A (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com | 3 Year | Pass in All Subjects in any discipline |

We have sent past students of: St. Cecilias (Batti), Vincent Girls (Batti), St. Patrick's (Jaffna), St. John's (Jaffna), Central (Jaffna), Kokkuvil Hindu, Jaffna Hindu, Chavakachcheri Hindu, St. Michaels' (Batti), Hartley (Point Pedru), Jaffna College (Vaddukoddai), Vavuniya MV.

M.B.B.S Admissions in INDIA

O/L
kl Lk; Kbj  khz t Hf s; , ej ph t g;
Pre-University (Foundation Course)
* Arts and Science (2 years)
* Engineering (3 years)
f w; f newp a Kbj J NkYk; 3 t Ul qf s g;
Graduate / Engineer Mf t hagG

2006 A/L students can enrol with pending results

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, 50, Galle Road, Colombo 6
Call: 0777-767818 / 0114-512591





## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் ஆடிப்பூரத் (பூரகர்மா) திருவிழா

28.07.2006 வெள்ளிக்கிழமை

அம்பிகை அடியா..ளே!

நிகழும் ஆடிப்பூரத் தினத்தன்று (28.07.2006) வெள்ளிக்கிழமை பகல் மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 கலசாபிஷேகமும் எழுந்தருளி அம்பாளுக்கு விசேஷ திரவிய அபிஷேகமும் நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிஷேகமும் (1008 சங்குகள்), ஏனைய மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூஜை, பூரகர்மா (ருதுசாந்தி), தீபாராதனை, திருவூஞ்சல், வேதஸ்தோத்திர, திருமுறைப் பாராயணம், புஞ்பாஞ்சலி ஆகியனவும் அதனைத் தொடர்ந்து ''அழகிய தாமரைப்பூ'' வாகனத்தில் அம்பாள் ஆரோகணித்து வீதியுலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அதன் பின்னர் அடியார்களுக்கு அருட்பிரசாதமும் அடியார்களுக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரால் ''அமுதசுரபி'' மண்டபத்தில் அன்னதானமும் (மகேஸ்வர பூஜை) சிறப்பான முறையில் வழங்கப்படும்.

உற்சவ சிவாச்சாரியார்கள்-

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் ஆதீன சிவாச்சாரியார்கள்.

அடியார்கள் அம்பாளின் சந்நிதானத்துக்கு வருகைதந்து நிகழ்வுகளைக் கண்டு அன்னையை வழிபாடுசெய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நயினாதீவு.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
ஆடிப்பூரத்திருவிழா உபயகாரர்கள்.

(52604)(32.14.19.26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தவல்லியைப் போற்றும் ஆடிப்பூர அனுஷ்டானம்!



சாக்தம் அன்னையை அல்லது சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடு இயற்றுகின்றது. சக்தி உபாசகர்கள் சக்தி வடிவங்களைப் பலவாறு உருவமைத்துவழிபடுவார்கள். சாதாரணமாகப் பெண்களுக்கு அவர்களுடைய வயதைப் பொறுத்து, அவர்களுடைய பருவங்களை ஒன்பதாக வகுப்பர் தமிழ்ச் சான்றோர். அவையாவன பேதை, பெதும்மை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், மூதாட்டி, கிழவி என்பனவாகும்.

பராசக்தியை வழிபடநினைப்போர் முன்னர் கூறிய ஏதாவது ஒரு வடிவத்தில் வழிபடுவர். தாயாக எல்லோரும் வழிபட்டாலும் அன்னையைக் கன்னியாக வழிபடுவதே பெரும்பாலும் நிகழ்கிறது. வேதங்களெல்லாம் கன்னியாகவே அவளைக் காண்கின்றன. பூரணி, புராதனி, சுமங்கலை, திரியம்பசி, புங்கவி, சங்கரி, காரணி, நாதாந்த சக்தி, சக்தி, பைரவி, முக்கணி, சடாதரி, மதங்கி, சவுந்தரி, பராபரை, மனோன்மணி, சிவானந்தி, உமை, சியாமளை, நித்யகல்யாணி, சாம்பவி, புவனகௌமாரி என்று பல திருநாமங்களை உடையவளாக இருந்தாலும், தாயுமானவர் பாடுவது போன்று என்றும் கன்னியாகவே இருக்கிறாள்.

அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையும் கன்னியாக மட்டுமல்ல, ''அழக்குக்கொருவரும் ஒவ்வாத ஆனந்தவல்லியாகவும்'', ''மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி குனிதரும் சேவடிக்கோமளமாகவும்'', ''புவனம் பதினான்கையும் பூத்தவளாகவும் காத்தவளாகவும்'' இருக்கின்றாள். பராசக்தியாகிய அன்னையே உலகில் அனைத்திற்கும் சக்தியைக் கொடுப்பவளுமாகின்றாள்.

ஆடி மாதத்தில் ஆடிச் செவ்வாய், ஆடி அமாவாசை, ஆடி கார்த்திகை, ஆடிப்பூரம் என்பன அனுஷ்டிக்கப்படுகின்றன. ஆடிப் பூரநாளிலே அன்னை பக்குவம் அடைந்து மங்கைப் பருவம் அல்லது கன்னிப்பவரும் அடைந்ததாக பாவகம் செய்து விழாவெடுப்பது வழக்கம்.

பிரளய காலத்தில் ஆன்மாக்கள் எல்லாம் செயலற்று இருளிலே அடங்கிக்கிடந்தன. அந்த ஆன்மாக்கள் இயக்கம்பெற்று செயற்படும் பொருட்டு அவற்றிற்குச் சக்தி கொடுத்து இயக்கத்தைக் கொடுத்தவள் அன்னையே. பக்குவம் அடைந்த பின்னர் தானே மக்களைப் புறந்தருதல் கூடும். எனவே, ஆன்மாக்களை மலபந்தங்களிலிருந்து புறந்தருவதற்காக அன்னை கன்னிப்பேறெய்திய திருவிழாவாகவும் இதைக் கருதலாம்.

இன்றைய தினத்திலே அம்பாளுக்குச் சாஸ்திரமுறைப்படி அமைந்த 'பூரகர்மா' பூசைகள் நடைபெறும். நமது இல்லங்களிலே ருதுவாகிய பெண்களுக்குப் பூப்புனித நீராட்டு விழாவிலே செய்யப்படுகின்ற சகல மரியாதைகளும் செய்யப்படும். அன்னை சந்தன, குங்கும அலங்காரத்துடன் மந்தகாச மதிமுகவதனியாகத் திகழ்வாள்.

அவளுடைய உருவத்தைக் கருத்தில் வைத்துப் போற்றி வணங்குவோம். **நன்றி: முரசொலி**

# அருட்பாக்களை பொருளுணர்ந்து ஓதினால் எமக்கு எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை

## இலிங்கேஸ்வரர் ஆலய அடிக்கல்நடும் விழாவில் அருளுரை

கைதடி,ஜூலை28

சமயகுரவர்கள் அருளிய திருவருட்பாக்களைப் பொருளுணர்ந்து ஓதினால் எமக்கு இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.

- இவ்வாறு அருளுரை வழங்கினார் தவத்திரு. கணேசானந்தா சுவாமிகள்.

கைதடி ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமத்தில் மாதாஜி இலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கான அடிக்கல்லை நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அடிக்கல் நட்டு உரையாற்றிய போதே அவர் அதனைத் குறிப்பிட்டார்.

அவர் அருளுரையில் கூறியதாவது:-

நமது சமயகுரவர்கள் அருளிய திருவருட்பாக்களைப் பொருளுணர்ந்து நாம் ஓதுதல் வேண்டும். இவ்வாறு வாழப் பழகினால் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்பதை உணரலாம்.

நாம் பிறப்பின் பெருமையை உணரவேண்டுமெனில் குருத்துவப் பணியில் தம்மை அர்ப்பணித்த ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் அருள் வாக்குகளைப் பின்பற்ற வேண்டும்.

மாதாஜி இலிங்கேஸ்வரர் ஆலயத்தின் கட்டுமானப் பணிக்கு கைதடிப் பகுதி மக்கள் மட்டுமன்றி அனைவரும்உதவி மற்றும் ஒத்துழைப்பு வேண்டும் என்று சுவாமிகள் கூறினார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த சமூக சேவகர் குழந்தை வடிவேலு உரையாற்றுகையில்:-

1960ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஸ்ரீசச்சிதானந்தா அச்சிரமம் சச்சிதானந்த சுவாமிகள், யோகர் சுவாமிகள், குடைச் சுவாமிகள், கடையிற் சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் ஆகியோரின் பாதங்கள் பதியப்பெற்ற மகத்துவம் உடையது. இவர்களின் வழிகாட்டுதலிலேயே மாதாஜி செல்லம்மா வாழ்ந்து வந்தார்.

அம்மையார் குரு போதனையைப் போற்றி வாழ்ந்தார். அதன் காரணமாக சிறு குடிசையாக இருந்த ஆச்சிரமம் வளர்ச்சியடைந்து இன்று இலிங்கேஸ்வரர் ஆலயமாக உயர்ந்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம அமிர்தவாரிதி செ. மோகனதாஸ் சுவாமிகளும் கலந்து கொண்டார்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கொழும்பு இராம கிருஸ்ணமிஷனின் தவத்திரு ஆத்மானந்தா சுவாமிகள், சிவத்தொண்டன் நிலைய தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் ஆகியோர் இந்த நிகழ்வுக்கு ஆசிச் செய்திகளை அனுப்பிவைத்திருந்தனர்.

(75)

# எமது பிராந்தியத்தில் சுனாமி அபாயமுண்டு; ஆனால் எச்சரிக்கைச் சாதனம் இன்னுமில்லை

## காலநிலைத் திணைக்கள அதிகாரி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை28

இலங்கைக் கடல் பிராந்தியம் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படக்கூடிய பிரதேசமாக இருந்த போதிலும் ஆழிப்பேரலை ஆபத்தை முன்கூட்டியே அறிவுறுத்தும் அபாய அறிவிப்புச் சாதனமொன்று இன்றுவரை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிறுவப்படவில்லை.

- இவ்வாறு காலநிலை அவதானத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜி.எச்.பி.தர்மரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையைப் போன்ற அபிவிருத்தி குன்றிய நாடொன்று ஆழிப்பேரலை எச்சரிக்கைச் சாதனத் தொகுதியை நிறுவுவது சாத்தியமற்றது. ஆகவே, தெற்காசியப் பிராந்திய நாடுகள் இணைந்து இந்தச் சாதனத்தை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நிறுவ முன்வர வேண்டியது அவசியமாகும். இப்பிராந்தியத்தில் இத்தகைய சாதனமொன்று நிறுவப்படுவது மிக இன்றியமையாத தேவையாகும்.

தற்போது இந்தோனேசியக் கடற் பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழிப்பேரலை முன்னறிவிப்புச் சாதனத்தின் உதவியுடன் போதிய தகவல்களைப் பெறமுடிகிறது. இலங்கைக்கு அத்தகைய ஆபத்தொன்று உருவாவதற்கு ஒன்றரை மணி நேரத்துக்கு முன்னரே உரிய அபாய எச்சரிக்கையை செய்வதற்குக் காலநிலை அவதான நிலையம் தயார் நிலையில் உள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

(206)

## திவ்விய பிரபந்தம் பூர்த்திநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை28

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் திவ்விய பிரபந்த பாடல்கள் பாராயணத்தின் பூர்த்திநாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அத்துடன் காலை 9 மணி முதல் விசேட பூசை ஆராதனைகள் இடம்பெற்று வரதராஜப்பெருமாள், பன்னிரு ஆழ்வார்கள் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். [illegible] 51 தினங்களாகத் திவ்விய பிரபந்தம் பாராயணம் செய்[illegible] குறிப்பிடத்தக்கது.

(204-15)


## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜூலை28

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி ஆலயத்தில் கடந்த 17ஆம் திகதிமுதல் நான்காம் திருமுறை முற்றோதல் இடம்பெற்றுவருகிறது. மன்றத்தின் ஏற்பாட்டில் ஆலயங்கள் தோறும் சாந்தி, சமாதானம் வேண்டி திருமுறைப் பாராயணம் நடைபெற்று [illegible] குறிப்பிடத்தக்கது.

(204)

# தெய்வீக ஸ்தலங்களில்



நவாலி அட்டகிரி குருக்கள் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் போது புதிய மஞ்சத்தில் சுவாமி திருவீதியுலா இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:எஸ்.ரமேஷ்)



பனிப்புலம், காலையடி தெற்கு ஞானவைரவர் ஆலயக் கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலசம் வைக்கும் சடங்கு இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)



நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயப் பெருநாளின்போது மாதாவின் திருச்சொரூப பவனி நடைபெறுவதைப் படத்தில் காணலாம். (படம்: நவாலீச் செய்தியாளர்)



மல்லாகம் புனித சதாசகாய மாதா தேவாலய வருடாந்தத் திருப்பலிப் பூசையின்போது மாதா திருச்சொரூப பவனி இடம்பெறுவதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)



தென்னாபிரிக்கா டர்பன் நகரில் உள்ள சிவன் ஆலயக் கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இதில் கிரியைகள் நடத்துவதற்காகச் சென்ற கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களை ஆலய நிர்வாகத்தினர் மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம். (படம்: வலி.தென்மேற்குச் செய்தியா[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

யாழ்.நகரில் நாவலர் வீதியில் இயங்கும் Focus Net Cafe விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.191/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (52648)

32 இணைந்த நிலையில் உள்ள ரெலிபோன் பூத்துக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி இல.191/2, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P.:0777737672 (52647)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

குக்கஸ்பெயினர் ஆண் (4மாதம்), பெண்(2வயது), கறுப்பின நாய்க்குட்டி புத்தகத்துடன் விற்பனைக்குண்டு. 'அல்பா மிக்ஷர்' லேன், மானிப்பாய். தொடர்பு: T.P.:0212222887 (52649)

## இரசாயனவியல் தேசிய அறிவுப்போட்டி

இலங்கை இரசாயனவியல் கழகம் வருடா வருடம் நடத்தும் "ஆஸ்திரேலியன் தேசிய இரசாயனவியல் அறிவுப் போட்டிப் பரீட்சை" நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரம் - தரம் 13இல் கல்வி கற்கும் கணித - விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கும், சாதாரண தரம் கற்கும் மாணவர்களுக்கும் என இரு பிரிவாக இப்பரீட்சை நடத்தப்படும்.

பல்வேறு நாடுகளுக்கிடையிலும் நடைபெறும் இந்தப் பரீட்சையில் யாழ்ப்பாணத்திலிருந்து 792 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (204)

## தவறிவிட்டது

இல.394, பிரதானவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மேரிகிறேஸ் புஸ்பம் யோசவ் அன்ரனி என்பவருடைய இல.**M.1471885** ஐ உடைய கடவுச்சீட்டு யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். (52638)

நல்லூரைச் சேர்ந்த கந்தையா விஜேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (790704126 V), விசேட அடையாள அட்டை என்பன அரசடி சந்திக்கும், ஆனைப்பந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாருதி மில், 396, பருத்தித்துறை வீதி என்னும் விலாசத்துடனோ 0779004424 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளவும். (52654)

கிறிஸ்துவுக்காக இளைஞர் (Y.F.C.), சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் S.P.டைனீசியஸ் என்பவருடைய காரியாலய ஆவணங்கள், நாள்குறிப்பேடு என்பன அடங்கிய கறுப்புநிற **Bag** 26-07-2006 மாலை 5 மணியளவில் சுண்டுக்குளிக்கும் கல்வியங்காடு பெற்றோல் நிலையத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு: **T.P.:0212222297, 0777229713** அல்லது கிறிஸ்துக்காக இளைஞர், 462, பிரதான வீதி. (52653)

## கூட்டம்

யாழ்ப்பாணம்ஜூலை28

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (202)

## கண்ணீர் அஞ்சலிகள்

*யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இறுதியாண்டு மாணவனும், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவருமான சி.விஜயரூபனின் அன்புத் தந்தை*

**கந்தையா சிவசோதி**

*அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.*

**யாழ்-பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியம்.**

(52643)(26.17.15)

## வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## கேள்வி அறிவித்தல் - 2006

வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரதேச சபையால் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 11-08-2006ஆம் திகதி பி.ப.2 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) பதிவுசெய்யப்பட்டவர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட தொகையை செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிட்டு, அரக்கு முத்திரை வைத்து *செயலாளர், வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை, கரவெட்டி* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும், இரண்டாம் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் 14-08-2006ஆம் திகதி மு.ப.11 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும்.
3. கேள்விகள் 14-08-2006 ஆம் திகதி பி.ப.1 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி ரூபா |
|---|---|---|---|---|
| 01 | வேம்படி கிளானை வீதி புனரமைப்பு | 10,000.00 | 500.00 | 75.00 |
| 02 | குலானைப் பிள்ளையார் கோயில் வீதி புனரமைப்பு | 8,625.00 | 500.00 | 75.00 |
| 03 | அல்லையம்பதி குறுக்கு வீதி புனரமைப்பு | 6,950.00 | 500.00 | 75.00 |
| 04 | சாவ-வல்லியானந்தா இணைப்பு வீதி திருத்தம் | 3,930.00 | 500.00 | 75.00 |
| 05 | பழையவளவு வீதி திருத்தம் | 3,885.00 | 500.00 | 75.00 |
| 06 | முடக்காடு வீதி 2ஆம் முறை தாரிடல் | 2,240.00 | 500.00 | 75.00 |
| 07 | கிளானை கஞக்காவத்தை வீதி, 2ஆம் முறை தாரிடல் | 2,475.00 | 500.00 | 75.00 |
| 08 | நெல்லியடி பொதுச்சந்தை மலசல கூடம் அமைத்தல் | 2,225.00 | 500.00 | 75.00 |
| 09 | நெல்லியடி பொதுநூலக திருத்தம் | 2,500.00 | 500.00 | 75.00 |
| 10 | கட்டைவேலி உபஅலுவலக திருத்தம் | 1,000.00 | 500.00 | 75.00 |
| 11 | வெள்ளெருவை வைரவர் வீதி புனரமைத்தல் | 3,000.00 | 500.00 | 75.00 |
| 12 | செம்பாடு வீதி திருத்தம் | 1,000.00 | 500.00 | 75.00 |
| 13 | கட்டாக்காலி நாய் அழிப்பு நீர்த்தொட்டி அமைத்தல் | 1,650.00 | 500.00 | 75.00 |

திரு.சி.வே.குலநாயகம்,
*செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.*
*25.07.2006*

(சி/50534)(26.17.15)(19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**க.பொன்னுக்கோன்**
*திதி: சஷ்டி*

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.02.1923 | 29.05.2005 |



அமரர்
**பொ.சாவித்திரி**
*திதி: திருதியை*

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28.02.1936 | 07.08.2005 |

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து
எங்களை வாழ்வித்த எமது அன்புத் தெய்வங்களே!
மனித வாழ்வில் புனிதப்பணி செய்து இறைவனின்
இனிய திருவடிகளில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

என்றும் உங்களை நினைந்து உள்ளமுருகி வேண்டி நிற்கும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி/50530)
(26.17.15)

# மகளிர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வித்திட்டத்தின் கீழ் பின்வரும் பயிற்சிகள் இலவசமாக நடத்தப்படவுள்ளன.

1) மனைப்பொருளியல் டிப்ளோமா
2) மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி
3) தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி
4) குறுகியகால கைவேலைப் பயிற்சி
5) Fondan Icing & Sugar Graft
6) Facial
7) ஆண்களுக்கான உடை அமைத்தல் பயிற்சி

விண்ணப்ப முடிவு திகதி : 05-08-2006

விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் சபையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி 2ஆம் மாடி,
12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/50528)(26.17.15)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் இக்ராட் (ICTAD) தரம் M8,M9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 28-07-2006 தொடக்கம் 11-08-2006ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை ஆகும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 14-08-2006 நண்பகல் 12 மணிவரை ஆகும். கேள்வி திறக்கப்படுவது 14-08-2006 பிற்பகல் 2.30இற்கு இடம்பெறும். (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்) கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வியாற்றலைக் கொண்டிருக்கவேண்டும். கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை *செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை *பிரா.உ.உ.ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | இக்ராட் பதிவு தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| 1. சனசமூக நிலையத் திருத்தம் | M 9 | 3500.00 | 690.00 |
| 2. தொண்டைமானாறு பொதுமலகூடத் திருத்தம் | M 8 | 3350.00 | 690.00 |
| 3. கோணாவளை வீதித் திருத்தம் | M 8 | 14900.00 | 690.00 |
| 4. கொம்மந்தறை வீதித் திருத்தம் | M 8 | 4700.00 | 690.00 |
| 5. வாவினி வீதித் திருத்தம் | M 8 | 6000.00 | 690.00 |
| 6. வாவினி வீதித் திருத்தம் கட்டம் 2 | M 8 | 6700.00 | 690.00 |
| 7. பொதுநோக்கு மண்டபம் கட்டம் 2 | M 9 | 4500.00 | 690.00 |
| 8. பஸ்நிலையம் கட்டம் 2 | M 9 | 2500.00 | 690.00 |

**கு.அமிர்தலிங்கம்,**
*செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை,*
27.07.2006

(சி/50534)(26.17.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா அத்துமீறித் தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடி கொடுக்க பாகிஸ்தான் தயார்

## எச்சரிக்கை விடுக்கிறார் பாகிஸ்தான் அதிபர்

இஸ்லாமாபாத்,ஜூலை28

பயங்கரவாதிகளை வேட்டையாடுவது என்ற பெயரில் இந்தியா அத்துமீறி பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்த முற்பட்டால் தக்க பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்.

கராச்சியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையைத் தொடக்கிவைத்து ஆரம்ப உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:-

பயங்கரவாதச் செயல்களை ஒடுக்கும் நடவடிக்கையில் இந்தியாவுக்கு ஒத்துழைக்க பாகிஸ்தான் தயாராக இருக்கின்றது.

ஆனால், பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்குப் புகலிடம் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு யாராவது அத்துமீறி எங்கள் மீது தாக்குதல் நடத்தினால் அதை நாங்கள் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கமாட்டோம். பாகிஸ்தான் தக்க பதிலடி கொடுக்கும். எந்தச் சூழ்நிலையையும் சந்திக்கும் அளவுக்குப் பாகிஸ்தான் இராணுவம் வலுவாக உள்ளது.

அமைதி வழியைக் கடைப்பிடிக்கவே பாகிஸ்தான் விரும்புகிறது. இந்தியாவுடன் அமைதிப் பேச்சைத் தொடரவே பாகிஸ்தான் விரும்புகிறது. பயங்கரவாதச் செயல்களைப் பாகிஸ்தான் ஒரு போதும் ஆதரிக்கவில்லை. பயங்கரவாதிகளை ஒடுக்க வேண்டும் என்பதிலும் பாகிஸ்தானுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. இவ்விடயத்தில் இந்தியாவுடன் ஒத்துழைக்க பாகிஸ்தான் தயாராகவுள்ளது.



அமைதியை நாங்கள் விரும்பும் அதே நேரத்தில் நாட்டின் பாதுகாப்பையும் நாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. இந்தியா உள்ளிட்ட எந்த நாடாவது தாக்க முற்பட்டால் அதற்குப் பதிலடி கொடுக்கப் பாகிஸ்தான் தயராக உள்ளது - என்றார் - முஷாரப். (202)



லெபனான் மற்றும் காஸா மீது இஸ்ரேலின் விமானப் படை நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்து கடந்த புதன்கிழமை முல்ற்றான் என்னும் இடத்தில் ஊடகவியலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. அந்த ஆர்ப்பாட்டத்தின்போது இஸ்ரேலின் தேசியக் கொடியை ஆர்ப்பாட்டக்காரர் எரிப்பதைப் படத்தில் காணலாம்.

## பாலிக் குண்டுத் தாக்குதல் சம்பவம்: குற்றவாளிகள் மூவருக்கு மரண தண்டனை

ஜகார்த்தா,ஜூலை28

2002ஆம் ஆண்டு பாலி தீவில் குண்டுவெடிப்புக்கு காரணமாக இருந்து குற்றவாளிகளாகக் காணப்பட்டிருந்த மூன்று நபர்களுக்கும் அடுத்தமாதம் மரண தண்டனை நிறைவேற்றப்படவிருக்கின்றது.

ஓகஸ்ட் மாதம் இறுதி அளவில் அம்மூவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவிருப்பது பற்றி அவர்களின் குடும்பங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்ரோஸி, அலி குப்ரொன் மற்றும் இமாம் சமுத்ரா ஆகியவர்களே குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ள மூவரும் ஆவர். குற்றவாளிகள் தம் மீதான தீர்ப்பினை மறுபரிசீலனை செய்யும்படியாக விண்ணப்பம் செய்வார்களானால் மரண தண்டனை நிறைவேற்றம் கால தாமதமாகலாம் என்று அதிகாரிகள் கருகிறார்கள். ஓகஸ்ட் 22ஆம் திகதி இவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இரவு விடுதிகளில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 200 பேருக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். (ப)

## ஆப்கான் ஹெலி விபத்தில் 16 பயணிகள் மரணம்

காபுல்,ஜூலை28

தென்கிழக்கு ஆப்கானிஸ்தானில், வீழ்ந்து நொறுங்கிய ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்த 16 பயணிகளும் பலியான தாகக் கூட்டணிப் படை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஆப்கான் பாக்தியா மாகாணத்தில் கடந்த புதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

பலியானவர்களில் 12 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களின் சடலங்கள் தேடப்பட்டு வருவதாகவும் அமெரிக்கா தல்லைமையிலான கூட்டணிப் படைகளின் பேச்சாளர் கேணல் டொம் கொலின்ஸ் தெரிவித்தார்.

அமெரிக்க சிவிலியன்கள் இருவரும் டச்சுப் படையினர் இருவரும் இதில் அடங்குவர். பயணிகளில் எவரும் உயிர் தப்பவில்லையென்று அவர் தெரிவித்தார். மலைப்பிரதேசத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்திற்குக் காரணம் எதுவும் தெரியவரவில்லை. (ப)

## விசாரணைக்காக வலுக்கட்டாயமாக நீதிமன்றுக்கு என்னை இழுத்து வந்தனர்

### சதாம் ஹுசேன் சீற்றம்

பக்தாத்,ஜூலை28

விசாரணைக்காக நான் அழைத்துவரப்படவில்லை. எனது விருப்பத்தை மீறி வலுக்கட்டாயமாக இழுத்து வரப்பட்டேன் என ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பமான விசாரணையிலேயே நீதிமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

1982ஆம் ஆண்டு நடந்த படுகொலைச் சம்பவம் தொடர்பாக சதாம் ஹுசேன் மற்றும் சிலர்மீது அமெரிக்கா நியமித்த நீதிமன்றத்தில் விசாரணை நடக்கின்றது. அந்த விசாரணையின் தொடர்ச்சியாக கடந்த புதன்கிழமை விசாரணை நடைபெற்றது. சதாமின் வழக்கறிஞர்கள் விசாரணையைப் புறக்கணித்தனர். விசாரணைக்காக அழைக்கப்பட்ட சதாம் நீதிமன்றத்தில் கூறுகையில்,

இங்கே நான் அழைத்துவரப்படவில்லை. வலுக்கட்டாயமாக இழுத்துவரப்பட்டுள்ளேன். எனக்காக நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர்களை மக்கள் எதிரிகளாகத்தான் பார்க்கிறார்கள். எனக்குச் சுயமரியாதை அதிகமாக இருப்பதால் பிடிவாதம் பிடிக்காமல் இங்கே வந்துள்ளேன்.

அத்துடன், துப்பாக்கியால் சுட்டு இறக்கவே விரும்புகிறேன். நான் ஓர் இராணுவ வீரன். எனக்கு மரண தண்டனை விதிக்கும் பட்சத்தில் தூக்கிலிடப்பட்டு இறப்பதைவிட துப்பாக்கியால் சுடப்பட்டு இறப்பதையே விரும்புகிறேன் - என்றார். (202)

## இந்திய- அமெ.அணுசக்தி ஒப்பந்தம் அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல்

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே அண்மையில் கையெழுத்தான அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த ஒப்பந்த சட்டமூலம் தொடர்பாக கொண்டுவரப்பட்ட 3 திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டன. இந்த ஒப்பந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 359 வாக்குகள் கிடைத்தன. 68 பேர் எதிர்த்து வாக்களித்தனர். இந்த ஒப்பந்தத்தில் செப்ரெம்பர் மாதம் அமெரிக்க அதிபர் புஷ் கையெழுத்திடுவார் என அமெரிக்க நாடாளுமன்றம் தெரிவித்தது. (202)

## சீர்காழிப் பகுதியில் முதுமக்கள் தாழி

சீர்காழி,ஜூலை28



சீர்காழி அருகே முதுமக்கள் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. முற்கால மக்கள், இறந்தவர்களின் உடல்களை பெரிய தாழிக்குள் வைத்து அடக்கம் செய்வார்கள். அவை முதுமக்கள் தாழி என்று அழைக்கப்படுகின்றன.நாகை மாவட்டம் சீர்காழி அருகேயுள்ள பூச்சக்காடு கிராமத்தை சேர்ந்த ஆரோக்கியசாமி என்பவர் வீட்டு சுற்றுச் சுவர் கட்டுவதற்காக நேற்றுக் காலை நிலத்தைத் தோண்டினார். அப்போது 6 அடி ஆழத்தில் ஒரு விநோத பொருள் இருப்பதை கண்டார். அதைப் பாதுகாப்பாக மேலே எடுத்தபோது, முதுமக்கள் தாழி என்பது தெரியவந்தது.

மூன்றரை அடி உயரம், 8 அடி சுற்றளவு கொண்ட அதற்குள் மனித எலும்புகள், 2 மண் கலசங்கள், சிறு மண்பானை ஆகியவை இருந்தன. நாகை தொல்பொருள் ஆய்வுத்துறைக்கு இதுபற்றி தகவல் தெரிவித்தார். இந்தத் தாழி, எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## ஜி.எஸ்.எல்.வியின் தோல்வி குறித்து ஆராய ரொக்கட்டைத் தேடும் பணி ஆரம்பம்

ஸ்ரீஹரிகோட்டா,ஜூலை28


இந்தியா விண்ணில் செலுத்தி கடலில் வீழ்த்தப்பட்ட ஜி.எஸ்.எல்.வி.ரொக்கெட்டின் தோல்வி குறித்து ஆராயும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக கடலில் வீழ்ந்த ரொக்கட்டைத் தேடும் பணி தற்போது நடைபெற்றுவருகின்றது.

இந்திய விண்வெளித்துறை சார்பில் ஜி.எஸ்.எல்.வி. ரொக்கெட் தயாரிக்கப்பட்டு 2 தொன் எடையுள்ள செய்கைக் கோளுடன் விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால், எதிர்பாராதவிதமாகச் சரியாக எரியாத நிலையில் போதிய அழுத்தத்தைக் கொடுக்காததால் ரொக்கெட் இலக்குத் தவறிச் சென்றது.

இதைத் தொடர்ந்து நடுவானில் விஞ்ஞானிகள் ரொக்கெட்டை வெடிக்க வைத்தனர். அது வங்காள விரிகுடா கடலில் வீழ்ந் தது.

தற்போது ரொக்கெட் வெடிப்புக்குக் காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. (202)

## திருப்பதி மீது தாக்குதல் நடத்தப் போவதாக தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துக் கடிதம்!



நகரி,ஜூலை28

திருப்பதி கோயில் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தவுள்ளதாக கோயிலுக்கு மிரட்டல் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மும்பை குண்டுவெடிப்பையடுத்து இந்தியாவின் புகழ்பெற்ற இடங்களைத் தகர்க்கப் போவதாகவும் தாக்குதல் நடத்தப்போவதாகவும் தெரிவித்துப் பல்வேறு மிரட்டல்களும் விடுக்கப்படுகின்றன. இதனால் நாடு முழுவதும் உசார்ப்படுத்தப்பட்டுள்ளதுடன், முக்கிய இடங்களில் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவில் புகழ்பெற்ற ஆலயமான திருப்பதிக்கு மிரட்டல் கடிதம் வந்துள்ளது. அத்துடன் திருத்தணிப் பொலீஸாருக்கும் முகவரியில்லாத அஞ்சல் அட்டையில் மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் திருப்பதிக் கோயில் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. இதையடுத்து திருப்பதியின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (202)

## இந்துமதத் தலைவர்களைக் கொல்வதற்கு கோவையில் மிகப்பெரும் சதித்திட்டம்

கோவையிலுள்ள இந்துமதத் தலைவர்கள் ஐவரைக் கொல்வதற்கு மிகப்பெரிய சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளதாக பொலீஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை கோவையில் வெடிபொருள்களுடன் கைதானவர்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர் என்றும் -

கைதானவர்களிடமிருந்து சக்திவாய்ந்த வெடிகுண்டுகள், தீவிரவாத செயல்களைத் தூண்டும் சி.டிக்கள், கோவை நகரின் முக்கிய இடங்களைக் குறிக்கும் வரைபடங்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப நபர்கள் ஐவரும் கோவை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். விசாரணையின் பின்னர் சேலம் மத்திய சிறையில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். விசாரணையின்போது பல தகவல்கள் இவர்களிடமிருந்து வெளியாகியுள்ளன.

போத்தனூர் பகுதியில் ஆருண்பாட்சா தலைமையில் 4 பேருக்கு வெடிகுண்டு பயிற்சி அளிக்கப்பட்டதாகவும், 5 இந்து மதத் தலைவர்களைக் கொலை செய்வதற்கான பட்டியலையும் அவர்கள் தயாரித்ததாகவும் விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி, டில்காரவின் பந்துவீச்சில் சுருண்டது தென்னாபிரிக்க அணி

கொழும்பு, ஜூலை 28

டில்கார பெர்னாண்டோவின் வேகத்திற்கும் முரளியின் சுழலிற்கும் ஈடுகொடுக்க முடியாத தென்னா பிரிக்க அணி நேற்று ஆரம்பமான முதல் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் 169 ஓட்டங்களிற்குள் தனது சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. தேநீர் இடைவேளைக்குச் சற்றுமுன்ப தாக தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்ஸ் முடிவிற்கு வந்தது. முரளி மற்றும் பெர்னாண்டோ ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தி தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர்களுக்கு அச்சுறுத்தல் கொடுத்தனர்.



இலங்கை அணியுடனான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் முத்தரப்புத் தொடரில் பங்குபெறுவதற்காக பிரின்ஸ் தலைமையிலான தென்னாபிரிக்க அணி இங்கு வந்துள்ளது. இவ்விரு அணிகளிற்குமிடையிலானமுதல் டெஸ்ட் நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி மதிய போசன இடைவேளைக்குள் தனது ஆரம்ப வீரர்களான கிப்ஸ் மற்றும் அன்ட்ரூ கோலை இழந்துவிட்டது. இருவரையும் 'போல்ட்' முறையில் வெளியேற்றினார் டில் கார பெர்னாண்டோ. அணி 45 ஓட்டங்கள் பெறுவதற்கிடையில் இருவரும் ஆட்டமிழந்திருந்தனர். தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டில் ரூடோல்ப் மற்றும் ஹஸீம் அம்லா ஆகியோர் 33 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் மஹ்ரூப்தன் கைவரிசையைக் காட்டினார். தென்னாபிரிக்காவின் துடுப்பாட்டத்தில் ஆகக் கூடுதலாகப் பெறப்பட்ட இணைப் பாட்டம் இதுவேயாகும். 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரூடோ லப், மஹ்ரூப்பின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து வந்த அணித்தலைவர் பிரின்ஸ் வெறும் ஓர் ஓட்டத்துடன் அதே பாணியில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்களை முரளிதரன் தனது சுழலைக் காட்டி அச்சுறுத்தினார். ஹஸீம் அம்லா, போஜே, பௌச்சர் ஆகியோரை முரளி வெளியேற்றினார். ஒரு முனையில் விக்கெட்டுகள் இழந்து கொண்டிருக்க மறுமுனையில் டீ வில்லியர்ஸ் தனது அதிரடி மூலம் ஓட்டங்களைக் குவித்தார். 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது அவரையும்வெளியேற்றினார் முரளி. கடைசியில் 169 ஓட்டங்களிற்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது தென்னாபிரிக்கா.




பந்து வீச்சில் முரளி 41 ஓட்டங்களிற்கு 4 விக்கெட்டுக்களையும் பெர்ணாண்டோ 48 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் மஹ்ரூப் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டுகளையும் வீழ்த்தினர். பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கையணி தனது ஆரம்ப வீரர்களான ஜெயசூரியா [4], தரங்க [7] ஆகியோரின் விக்கெட்டுகளைபறிகொடுத்த நிலையில்துடுப்பெடுத்தாடிவருகின்றது.

## ஓட்ட விவரம்

### தென்னாபிரிக்கா

முதல்இன்னிங்ஸ்(50.2ஓவர்கள்)

| | |
|---|---|
| ஹேர்சல் கிப்ஸ் b பெர்னாண்டோ | 19 |
| அன்ட்ரூ கோல் b பெர்னாண்டோ | 17 |
| ஜக்ஸ் ருடோல்ப் c பி.ஜெயவர்த்தன b மஹ்ரூப் | 29 |
| ஹஸீம் அம்லா st பி. ஜெயவர்த்தன b முரளி | 19 |
| அஸ்வல் பிரின்ஸ் c பி.ஜெயவர்த்தன b மஹ்ரூப் | 01 |
| டீ வில்லியர்ஸ் c கப்புகெதர b முரளி | 65 |
| மார்க் பௌச்சர் c ஜெயசூரியா b முரளி | 04 |
| நிக்கி போஜே lbw b முரளி | 05 |
| அன்ட்ரூ நெல் lbw b பெர்னாண்டோ | 00 |
| டேல் ஸ்ரைன் b பெர்னாண்டோ | 00 |
| நிற்னி ஆட்டமிழக்கவில்லை | 00 |
| உதிரிகள் | 10 |
| மொத்தம் (சகல விக்கெட்டுகளும் இழப்பு) | 169 |

விக்கெட் இழப்பு:- 1-32, 2-45, 3-78, 4-80, 5-112, 6-128, 7-148, 8-151, 9-151, 10-169.

பந்துவீச்சு:- லசித் மாலிங்க 10-2-38-0, மஹ்ரூப் 9-1-32-2, பெர்னாண்டோ 13-2-48-4, முரளி 18.2-6-41-4.

## பயிற்சியாளராகிறார் ரணதுங்கா?



இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன் ரணதுங்கவிற்கு இங்கிலாந்தின் கவுன்ரி அணி ஒன்றின் பயிற்சியாளராகும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை அணி வென்றபோது அவ்வணியின் தலைவராக அர்ஜுன ரணதுங்கா செயற்பட்டிருந்தார். இலங்கையணி சார்பாக 93 டெஸ்ட் ஆட்டங்களிலும் 269 ஒருநாள் ஆட்டங்களிலும் பங்குபற்றியுள்ள ரணதுங்கா 2001ஆம்ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்பு அரசியலில் பிரவேசித்த அவர் கடைசியாகச் சுற்றுலாத்துறை பிரதியமைச்சராக விளங்கினார். கடந்த வாரம் அவ்வமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். இந்நிலையிலேயே அவருக்குப் பயிற்சியாளராகும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இது தொடர்பாக ரணதுங்கா கருத்துக்கூறுகையில்:-

''இங்கிலாந்தின் கவுன்ரி அணிகளில் ஒன்று என்னைப் பயிற்சியாளர் பதவிக்கும் மற்றொரு அணி ஆலோசகர் பதவிக்கும் கோரியுள்ளன. எனது நாட்டிற்கு தற்போதைய நிலையில் நான் தேவைப்படவில்லை. இரண்டில் ஒரு பதவியை ஏற்பது குறித்து ஆலோசித்து வருகின்றேன்'' - என்று கூறினார்.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை28

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பாடும்மீன் விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழகம் மோதும்.

அரியாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும்.

[8-190]

யாழ்ப்பாணம், ஜூலை28

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் அஸ்ரா கிண்ணத்திற்கான 17 வயதிற்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி. [ஹாட்லிக் கல்லூரி மைதானம்]

★யாழ். இந்துக் கல்லூரி எதிர் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்.

[யாழ். இந்துக் கல்லூரி மைதானம்]

★யாழ். மத்திய கல்லூரி எதிர் பெரியபுலம் மகா வித்தியாலயம்

[யாழ். மத்திய கல்லூரி மைதானம்] [8-190]

# அஸ்ரா கிண்ணத்துக்கான ஒரு போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை28

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 'அஸ்ரா' கிண்ணத்துக்கான 15 வயதிற்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியின் ஓர் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.




யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கும் இடையில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டினையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

பிரதீபன் 10 ஓட்டங்களையும் நினேன் 11 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கோபிகன் 7 விக்கெட்டினையும் கரிஸ், வினோசன், தேவிகன் முறையே தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் ஆறு விக்கெட்டுகளை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ்யாண்சன் 111 ஓட்டங்களையும் ரதீஸ்கன் 39 ஓட்டங்களையும் ஜஸ்ரின் 22 ஓட்டங்களையும் எரிக் துஷாந் 12 ஓட்டங்களையும் யதுஸ்மன் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பிரதீஸ் மூன்று விக்கெட்டுகளையும் அரவிந், சரத்குமார் முறையே தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தமதுஇரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி ஐந்து விக்கெட்டுகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. ஜீவதாஸ், அரவிந், பிரதிஸ், சரத்குமார் ஆகியோர் முறையே 25,22,24,10 ஓட்டங் களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில் கோபிகன், ரதீஸ்கன் ஆகியோர் இரண்டு விக்கெட்டுகளையும் கரிஸ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினார்கள்.

யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றதால் வெற்றிபெற்றது.

[8-190]

# பாலர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை28

உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ். மாநகரசபை பாலர் பாடசாலைகளிடையே நடத்தும் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர் பண்டார வளவிலுள்ள பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபைச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் கலந்துகொள்வார். ள [8-202-ரி]


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை வள்ளியம்மை

(ஓய்வுபெற்ற தாதி)



நெடுந்தீவு மேற்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.31, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை வள்ளியம்மை 23.07.2006 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-இராமாசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகமுத்து ஆகியோரின் மருமகளும் அமரர் கா.மு.சின்னத்துரை (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, பசுபதி சோமசுந்தரம், குமாரவேலு மற்றும் கண்மணியம்மா, குமாரசாமி, முத்துத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜராஜேஸ்வரி, புவனராஜேஸ்வரி (மேல்நீதி மன்றம், வவுனியா), நகுலராஜேஸ்வரி (லண்டன்), கேதீஸ்வரராசா (M.S.K. ஸ்ரோர்ஸ்), குருபரராசா (பனை அபிவிருத்திச் சபை), பாலராஜேஸ்வரி (ஜேர்மனி), மங்களராஜேஸ்வரி (ஆசிரியர், நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்), சக்தீஸ்வரராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன் (கிராம உத்தியோகத்தர்), உமாசரண் மற்றும் விஜயகுமாரன் (லண்டன்), ரதிகலா, துஷ்யந்தினி (கொமர்சல் வங்கி), நித்தியராசா (ஜேர்மனி), கருணானந்தன், சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரன்னா, பிரசாத், பிரதாப், பிரதீப், சோபிகா, சஜந், அஜந், பிரிஜந், சாயிவீனா, ஆதவன், ஆரணி ஆர்த்திகா, ஆருண்யா, ஆருஜா, மகிழ்ருதன், சாணவி, ஜாஹ்னுகா, ஜனார்த்தனன், பிரணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.08.2006 (வியாழக்கிழமை) லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.31, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777593765 (52667)

தகவல்:
குடும்பத்தினர்.

## அஞ்சலிகள்

திடீரென சமாதிநிலையடைந்த கந்தர் மடம்
சிவகுருநாதபீடம் மகாதேவ ஆச்சிரம குருபீடாதிபதி
ஸ்ரீமத் சோமஸ் கந்தவேள் சுவாமிகட்கு
எமது வணக்கத்தைச் செலுத்தி அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

உடுப்பிட்டி பண்டகைப்பிள்ளையார்
கோயில் பரிபாலன சபையினர்.
(52662)

## கண்ணீர்க்காணிக்கைகள்

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இறுதியாண்டு மாணவனும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரும் எமது நண்பனுமாகிய சி.விஜயரூபனின் அன்புத் தந்தை

கந்தையா சிவசோதி

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Friends,
1st Yr. Bio science (science faculty)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்புச் சந்தைக்கு நிரந்தரக் காணியில்லை கட்டடம் அமைக்க வந்த நிதி திரும்பிச் செல்லும் நிலை

## இதனால் மக்கள் பெரும் விசனம்

புதுக்குடியிருப்பு,ஜூலை28

புதுக்குடியிருப்பு சந்தைக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்குக் காணி இல்லாமையால் இக்கட்டடம் அமைக்கவென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

புதுக்குடியிருப்புச் சந்தைக்கென நிரந்தர சந்தைக் கட்டடமொன்று அமைத்துக் கொடுக்கப்படாமையால் வியாபாரிக்ளும் மக்களும் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

புதுக்குடியிருப்புச் சந்தை தற்போது நிரந்தரக் கட்டடமோ சொந்தக் காணியோ இல்லாத நிலையில் தனியார் ஒருவரது காணியில் தற்காலிகமாக இயங்கிவருகின்றது.

இந்நிலையில் இச்சந்தைக் கட்டடம் அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட நிதி சொந்தக்காணி இன்மையால் உடையார்கட்டு சந்தை அமைப்பதற்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இச்சந்தைக்கான கட்டடம் அமைப்பதற்கு அரச காணிகள் எதுவும் இல்லை என்றும் -

காணி கிடைத்ததும் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர் என்றும் -

இவ்விடயத்தை உரிய மேலதிகாரிகள் கவனத்திலெடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க உடனடியாக முன்வரவேண்டுமெனவும் மக்கள் கேட்டுள்ளனர்.

(203-353-ரி)

## உமையாள்புரத்தில் புதிய நூல் நிலையம்

கிளிநொச்சி, ஜூலை28

உமையாள்புரம் கிராமத்தில் புதிய நூல் நிலையம் ஒன்று அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

யு.என்.ஹபிற்றாஸ் நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் இந் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் உமையாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.இராஜதுரை, ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் தம்பிப்பிள்ளை, பொருண்மிய மதியுரையகத் திட்ட இணைப்பாளர் மனோகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கிராம மக்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இந்நூல் நிலையம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203)

## புளியங்குளம் பிரதேசத்தில் வேகக்கட்டுப்பாட்டு அறிவுறுத்தல்


புளியங்குளம், ஜூலை28

புளியங்குளம் பகுதியில் வாகனங்களில் பயணிப்போரின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக தமிழீழக் காவல்துறையினரால் வேகக்கட்டுப்பாட்டு விளம்பரப் பலகைகள் நடப்பட்டுள்ளன.

அண்மையில் அப்பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களையடுத்தே இந்த விளம்பரப்பலகைகள் நடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புளியங்குளத்திலிருந்து வவுனியா செல்லும் ஏ-9 வீதியில் 40 கிலோமீற்றர் வேகமும் புளியங்குளதத்திலிருந்து கனகராயன் குளம் வரை 60 கிலோமீற்றர் வேகமும் கனகராயன் குளப்பகுதியில் 40 கிலோமீற்றர் வேகமுமாக வாகனங்களைச் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றிக் காவல்துறையினர் தினமும் வேகக்கட்டுப்பாட்டை அவதானிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் கட்டுப்பாட்டை மீறுவோரிடம் குற்றப் பணமும் அறவிட்டு வருகின்றனர்.(203-355)



மன்னார், தேத்தாவடிக் கிராமத்தில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் அண்மையில் நடத்தப்பட்ட மருத்துவ சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: பூநகரிச் செய்தியாளர்)

# வன்னிச் செய்திகள்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கிணறு இன்றி பணியாளர் சிரமம்

புதுக்குடியிருப்பு,ஜூலை28

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கென சொந்தமாக கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்படாமையால் அங்கு பணிபுரிவோர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பிரதேச செயலகத்திற்குத் தேவையான நீரைப் புதுக்குடியிருப்பு பிரதேச சபை நீர்த் தாங்கிகள் மூலம் வழங்கிவருகின்றது.

இருந்தும் இவர்க்ளது அத்தியாவசிய தேவைகளுக்குப் போதிய தண்ணீரைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, எவராவது முன்வந்து பிரதேச செயலகத்திற்கென ஒரு கிணற்றை அமைத்துத் தருமாறு அங்கு கடமைபுரிவோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (203-353)

## வவுனியாவில் நடைபெற்ற தாய், சேய் சிகிச்சைகள் நிறுத்தம்

புளியங்குளம், ஜூலை28

வவுனியாப் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்த தாய், சேய் சிகிச்சைகள் கடந்த இரண்டு மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியாப் பிரதேசத்தில் பாலமோட்டை, சேமமடு, இளமருதங்குளம் ஆகிய இடங்க்ளிலும் வவுனியா வடக்கில் குளவிசுட்டான், பட்டிக்குடியிருப்பு, மருதோடை ஆகிய பகுதிகளிலும் இந்தச் சிகிச்சைகள் நடத்தப்பட்டுவந்தன.

அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்தச் சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-355)

## செம்மலைக் கிராமத்தில் புதிய தொழிற்பயிற்சி நிலையம்

கிளிநொச்சி,ஜூலை28

முல்லைத்தீவு செம்மலைக் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வு கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது.

ஊரக மேம்பாட்டுத் தலைவர் தினேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை அளம்பில் பிரதேச பங்குத்தந்தை நிகழ்த்தினார்.

தொடர்ந்து தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையை அளம்பில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் திரை நீக்கம் செய்துவைக்க பயிற்சி மண்டபத்தை முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வே.சிவனடியார் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் இராஜகோபால், செம்லைக் கிராம அலுவலர் எல்.பரஞ்சோதி, உலக கனேடியப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கமல், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வே.சிவனடியார் ஆகியோர் உரையாற்றினர்.

இத்தொழிற்பயிற்சி நிலையமானது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஜேர்மன் நாட்டுக் கிளையினதும் அந்நாட்டின் சிவ்டொர்வ் நகர மக்களினதும் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது.

இப்புதிய கட்டடத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மைய நிறுவனங்களில் ஒன்றான கிராமியப் பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் உலக கனேடியப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் தொழிறபயிற்சிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

(203-307-353)

## 'சுனாமி' பாதித்த வர்த்தகர்களுக்கு அபிவிருத்திக்கான கொடுப்பனவுகள்

புதுக்குடியிருப்பு,ஜூலை28

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளின் அபிவிருத்தியை மேம்படுத்த கிளிநொச்சி கைத்தொழில் வேளாண் வணிக அபிவிருத்தி நிறுவனத்தினர் மூன்றாம், நான்காம் கட்ட அபிவிருத்திக் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளனர்.

நெதர்லாந்து கைத்தொழில் வேளாண் வணிக நிறுவனத்தின் பங்களிப்புடன் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

ஆழிப்பேரலையால் தமது தொழில் வளங்களை இழந்த சிறுவியாபாரிகள், வணிகர் ஆகியோருக்கு இச்சேவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் தொழிலை மேற்கொள்வதற்கான வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு முன்னர் நடமாடும் வணிகம், சந்தைப்படுத்தல் போன்ற தொழில்களைச் செய்துவந்தவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வியாபாரிகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் அவர்களது தொழிலை மீளக்கட்டியெழுப்பும் நோக்குடனும் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன - என்று தெரிவிக்கப்பட்டது.(203-353)

## தமிழ்விழா நிகழ்வுகள்

வட்டக்கச்சி,ஜூலை28

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் தமிழ் விழா அண்மையில் நடைபெற்றது. கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் எஸ்.குணால் தலைமையில் தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

கல்லூரிக் கொடியை கல்லூரியின் பிரதி அதிபர் ப.சிறிதரன் ஏற்றிவைக்க, மங்கள விளக்கினை கல்லூரி பிரதி அதிபர் எஸ்.முத்தையா மற்றும் மூத்த ஆசிரியர்கள் ஏற்றிவைத்தனர். ஆசியுரையினை கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் வழங்க தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சுவாமி விபுலானந்தரின் பிறந்த தினமான கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தின் பல பாடசாலைகளில் தமிழ் விழா சிறப்புற நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அன்றையதினம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களென அனைவரும் பாரம்பரிய உடையணிந்து வந்திருந்தனர்.(203-405-ரி)

* * *

வெள்ளாங்குளம்,ஜூலை28

நாச்சிக்குடா அ.த.க. பாடசாலையின் தமிழ் விழா கடந்த 20ஆம் திகதி பாடசாலை முதல்வர் திருமதி மாணிக்கவாசகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம், அருட்சகோதரி கிறேஸ் மேரி ஆகியோருடன் அயல் பாடசாலைகளின் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள், ஆசிரியர்க்ளின் நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இதில் பூநகரிப் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

(203-415)



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தமிழ்விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.


நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர் ப.சிறிதரன் கல்லூரிக் கொடி ஏற்றுவதையும் கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் ஆசியுரை வழங்குவதையும் பாரம்பரிய உடையுடன் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவ, மாணவியரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி துணை அதிபர்
# திரு.கு.ஜெயானந்தன் அவர்களின்
# சேவை நலன் பாராட்டு விழா

**03.07.2006 அன்று ஓய்வுபெற்றுச் சென்ற துணை அதிபரின் சேவைநலன் பாராட்டு விழா இன்று (28.07.2006) யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறுகின்றது.**



## மனித நேயம் கொண்டவர்

'பிறப்பினால் ஒருவன் ஆசிரினாகிறான் இல்லை பயிற்றலால் உருவாக்கப்படுகிறான்'' என்ற சர்ச்சைகள் நிலவும் இன்றைய உலகில் ஆசிரியத் துவத்துக்கு ஒரு இலக்கணமாக திகழ்ந் தவர் திரு.கு.ஜெயானந்தன் அவர்கள். எமது கல்லூரியில் 25 வருட கல்விப் பணியில் ஆசிரிய ராகவும் பகுதித்தலைவராகவும், உபஅதிபராகவும் இருந்து ஆற்றிய பணிகளை இந்து சமூகம் என்றும் மறக்காது. மாணவருடன், ஆசிரியருடன், அதிபருடன், கல்விச் சமூகத்துடன் அவர் கொண்டுள்ள நெருக்கமான தொடர்பினை நோக்கும் போது அவர் ஒரு மனித நேயம் கொண்டவர் என்பதனை மறப்பதற்கில்லை.

கல்லூரிப் பற்றும், கபடமில்லா உள்ளமும் கொண்ட இவர் தனது சேவையின் இறுதிக் காலத் தில் உப அதிபராக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கும் பணியும் மகத்தானதே.

திரு.க.சந்திரசேகரா (முன்னாள் அதிபர்)
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## வாழ்த்துரை

'தென்மராட்சி மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அயராது பங்காற்றுகின்ற ஒரு தேசிய பாடசாலையாக பிரகாசிக்கின்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 19 ஆண்டுகளில் ஓர் விஞ்ஞான ஆசிரியராக இணைந்த ஜெயானந்தன் பல அரிய நல்ல அதிபர்களின் வழிகாட்டலில் தன்னைப் பூரணப்படுத்திக்கொண்டு இன்று ஒரு உப அதிபராகச் சேவை செய்கிறார். அவர் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் வேறு பாடங்களும் கற்பிக்கக் கூடியவர்.

பாடசாலையில் உள்ள எல்லாக் குழுக்களிலும் ஒரு உறுப்பினராக இருந்து தனது பங்கை திறம்பட ஆற்றினார். அத்துடன், விளையாட்டுக்குழு செயலாளர் பதவியிலிருந்து பல வருடங் களாக மாணவர்களை பல போட்டிகளில் வெற்றி பெறச் செய்திருக்கிறார். அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்

Wish Jeyanandan good health, prosperity & long life

K.J.Maheswaran (முன்னாள் அதிபர்)
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## பல்துறை விற்பன்னர்

'தென்மராட்சியின் தேசிய பாடசாலையான நூற்றாண்டு விழாக்கண்ட யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு.கு.ஜெயானந்தன் அவர்களின் சேவை பாராட்டுதற்குரியது. இவர் வகுப்பறைக் கல்விப் போதனையுடன் நின்று விடாது கல்லூரியின் விளையாட்டுத்துறை, பரீட்சைப்பகுதி ஆகிய தளநிலைகளில் பொறுப்பாக அருந்தொண்டாற்றியவரென்றால் மிகையாகாது. இக்கல்லூரிச் சமூகத்தால் விரும்பப்படும் நல்லியல்புகள் கொண்ட திரு.கு.ஜெயானந்தனின் சேவையைப் பாராட்டுவதுடன், அவரின் ஓய்வுக்காலம் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்

திரு.செ.சபாரத்தினம் (செயலாளர்),
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், முன்னாள் பிரதி அதிபர்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## பாராட்டுரை

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய ஒருவர் ஆசிரியர் திரு.கு.ஜெயானந்தன் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. விஞ்ஞானத்துறை, விளையாட் டுத்துறை என மாணவர்களை கட்டி ஆட்சி செய்து வழிநடத்திய ஒருவர் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக கல்லூரியின் வளர்ச்சியில் பங்கு பற்றி பாடசாலைவிட்டு வெளி யேறிய எம் போன்றவர்களை இன்றும் தனது அறிவுரைகளால் வழிநடத்தும் ஒருவர். இவர் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்கின்ற இவ் வேளையில் அவரது ஓய்வுக் காலம் நன்றே சிறந்திட பழைய மாணவர்கள் சார்பில் வாழ்த்துவதில் பெரு மகிழ்வு அடைகின்றோன்.

செ.செந்தூரன் (செயலாளர்),
பழைய மாணவர் சங்கம்,
யா/சாவ. இந்துக்கல்லூரி.சாவகச்சேரி

### குறிப்புகள்:

கல்வி கற்ற பாடசாலைகள்:
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்
யா/சம்பத்தரசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

சேவை விவரங்கள்:
மாத்./அறுபா மகாவித்தியாலயம், மாத்தறை
(15.03.1972-31.12.1977)
யா/பலாலி ஆசிரியர் கலாசாலை, வசாவிளான்
(01.01.1978-31.12.1979)
சிலா./கருக்குப்பனை றோ.க. பாடசாலை, சிலாபம்
(01.01.1980-27.05.1981)
சிலா./நஸ்ரியா முஸ்லிம் ம.வி. சிலாபம்
(28.05.1981-31.12.1981)
யா/சாவ. இந்துக் கல்லூரி, சாவகச்சேரி
(01.01.1982-02.07.2006)

1. பரீட்சைச் செயலர்
2. விளையாட்டுத்துறைச் செயலர்
3. பிரதம பரீட்சகர் - க.பொ.த. சா.த. விஞ்ஞானம்
4. விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்
5. பகுதித் தலைவர்
6. உப அதிபர்

## தன்னலம் கருதாச் சேவையாளன்

கல்விச்சேவையில் 34 ஆண்டுகளில் 24 ஆண்டுகளை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உபஅதிபராக திறம்படச் சேவையாற்றி தனது 60ஆவது அகவை பூர்த்தியாகும் முன்பே ஓய்வுபெற்றுள்ள திரு.குழந்தைவேலு ஜெயானந்தன் அவர்களது சேவை யைப் பாராட்டி வெளியாகும் இதழுக்கு எனது கருத்தினை வழங்க சந்தர்ப்பம் தந்த இறை வனின் கருணையை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். திரு.ஜெயானந்தன் அவர்கள் ஒரு பலதரப் பட்ட சேவையாளன். எமது கல்லூரியில் சிறந்த விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய காலத் தில் தனது திறமையாலும் ஆளுமையாலும் கல்லூரியின் பல பொறுப்புகளை ஏற்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது இவரது ஓய்வு கல்லூரிக்கு பலவிதங்களில் பேரிழப்பாகும். எனினும் அவரது ஓய்வு தவிர்க்க முடியாத ஒன்றாகும். இவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும், நலமாகவும் நீண்டதாகவும் அமைய ஆண்டவன் ஆசியை வேண்டி அவரது மனைவி, மக்கள் அனைவரை யும் வாழ்த்தி எனது கருத்தினை நிறைவு செய்கின்றேன்.

இ.கயிலைநாதன் (முன்னாள் அதிபர்)
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## உள்ளங்கவர்ந்த உப அதிபர்

'கடந்த ஓர் நூற்றாண்டுகளாக கல்விப்பணியாற்றி வரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஏறத்தாழ கால் நூற்றாண்டுகள் சேவையாற்றித் தனக்கென ஓர் முத்திரை பதித்தவர் எமது உப அதிபர் திரு.கு. ஜெயானந்தன் அவர்களாவார். தனது சேவைக்காலத்தில் ஆறு அதிபர் களின் கீழ் பணியாற்றி மாணவர்களதும் கல்லூரியினதும் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டவர். இவர் விஞ்ஞான ஆசிரியராக, பாட இணைப்பாளராக, விளையாட்டுத்துறைச் செயலாளராக, பரீட்சைச்சபைச் செயலாளராக, ஒழுக்காற்றுக் குழு உறுப்பினராக, முகாமைத்துவச் சபை உறுப்பினராக, ஆசிரிய சகோதரத்துவத் தலைவராக, பகுதித் தலைவராக, உப அதிபராக பல் வேறு நடி பங்குகளைக் கல்லூரியில் வகித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு ஒன்றினைச் சேர்ந்த இவர் தனது செயற்பாடுகளாலும் வழிப்படுத்தல்களாலும் ஆசிரியர்களாதும் மாணவர்களதும் உள்ளங்களைக் கவர்ந்தவர். சிரித்த முகத்துடன் துடிப்பாக பாடசாலையில் வலம் வரும் இவர் ,ஆசிரியர்களதும், மாணவர் களதும் நலன்களைக் கவனிப்பதில் வல்லவர். கல்லூரி நிர்வாகத்தில் துணை புரிந்த இவரது ஓய்வானது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனின் பாதக் கமலங்களை வேண்டுகிறேன்.

அ.கயிலாயபிள்ளை (அதிபர்)
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## தேடல் அவா கொண்டவர்

எமது கல்லூரியில் 2½ தசாப்தங்களாக சேவையாற்றி ஓய்வுபெறும் திரு.கு.ஜெயானந் தன் அவர்களை கல்லூரியின் சகோதரத்துவத் தலைவர் என்ற வகையில் வாழ்த்துவதில் பெருமகிழ்வுகொள்கின்றேன். சகோதரத்துவ உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றவர்களுடன் நெருங்கி கல்லூரிச் செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றவர். இவரின் செயற்பாடுகள் மூலம் கல்லூரி பலபெருமைகளைக் குவித்தது என்றால் அது உண்மையே. அவரது ஓய்வுக்காலம் சிறப்புறவும் அவரின் பிள்ளைகள் மேன்மேலும் சிறப்படையவும் கல்லூரிச் சகோதரத்தினர் சார்பில் வாழ்த்துகின்றோம்.

ந.பாலச்சந்திரன் (தலைவர்)
சாவகசேரி இந்துக்கல்லூரி சகோதரத்துவம்.

## மாணவர் மனங்களை வென்றவர்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கால் நூற்றாண்டுக்கு மேலாக ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக பணியாற்றி ஓய்வுபெறும் திரு.கு.ஜெயானந்தன் அவர்கள் கல்வியி லும் விளையாட்டிலும் களம் பல கண்டவர். மாணவர்களாகிய எம்மோடு தாமும் ஓர் உற் சாகமான இளைஞனாக ஓடிஓடி உவப்புடன் பணியாற்றிய அந்த நாள்கள் எம் நெஞ்சத் தடங்களிலே நிறைந்திருக்கின்றன. அன்பு கலந்த கண்டிப்புடன் எம்மை வழி நடத்தி எம் உள்ளங்கள் அத்தனையையும் ஒரு சேரக் கொள்ளை கொண்ட அவரின் ஓய்வுக்காலம் என் றென்றும் இனித்திருக்க இந்த அன்னையின் பெயரால் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மாணவ முதல்வர் சபை

---

உ
சிவமயம்

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.06.2006 வியாழக்கிழமை அன்று சிவபதமெய்திய எமது குலவிளக்கு

அமரர்
## செல்வி நவலெட்சுமி சதாசிவம் (மதுரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (28.07.2006) வெள்ளிக் கிழமை காலை 7 மணியளவில் வில்லூன்றி தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

180, கோயில் வீதி,
(கைலாச பிள்ளையார் கோயிலடி)
யாழ்ப்பாணம். (சி/50521) (24.21.17.15)

- சதாசிவம் குடும்பத்தினர்.

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை28

கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கலைமகள் சனசமூக நிலையத் தலைவர் செ.ரவியன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை28

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள யாழ். வீதி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் விளையாட்டுவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை ஆசிரியர் அகிலா சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீஸன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

## யாழ். மாவட்ட சட்டத்துறையினருக்கு...

ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்ற **செல்வி சாந்தா அபிமன்னசிங்கத்திற்கு** நாளை (29.07.2006) சனிக்கிழமை எமது சங்கத்தின் சார்பில் நடைபெறவிருந்த பாராட்டு வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

- சட்டத்தரணிகள் சங்கம்.

யாழ்ப்பாணம்.
28.07.2006 (52645) (24.21.15.17)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி பரமசாமி



**(முன்னாள் ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, முன்னாள் அதிபர் - மானிப் பாய் மகளிர் கல்லூரி,முன்னாள் ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆங்கில விரிவுரையாளர் - பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)**

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட மகேஸ்வரி பரமசாமி 24.07.2006 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - சரஸ்வதிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிற்றம்பலம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் பரமசாமியின் (முன்னாள் ஆசிரியர், நாவலர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் குமரன் (Canada), அனுசியா (U.K.), வாசுகி (California), வித்யா (Canada), செந்தூரன் (Canada) ஆகியோரின் அன்புத் தாயும் தர்சினி (Canada), உமாசுதன் (U.K.), சத்தியலிங்கம் (California), கமலநாதன் (Canada) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற திருமதி இராஜேஸ்வரி சிவப்பிரகாசம், செல்வி யோகேஸ்வரி கனகரட்ணம் (முன்னாள் ஆசிரியர் - இராமநாதன் கல்லூரி), திருமதி கணேஸ்வரி பஞ்சலிங்கம் (முன்னாள் ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிவப்பிரகாசம், காலஞ்சென்றவர்களான திருமதி பாக்கியம் இராசையா, கந்தசாமி (முன்னாள் அதிபரும் பிறப்பு இறப்புப் பதிவாளரும் உடுவிற் பகுதி), பஞ்சலிங்கம் (முன்னாள் அரச அதிபர், யாழ்.செயலகம்) ஆகியோரின் மைத்துனியும் விசாகன், வைஷ்ணவி, சத்தியா, சோபிதா, ஈசானி, மயிலோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Canada வில் எதிர்வரும் 31.07.2006 அன்று நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சிவாஜி (பெறாமகன்)
அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

T.P.: 0019054724265
92, CLAND FIELD STREET,
MARKHAM, ONTARIO, L353T6,
CANADA.

(52464)(21.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனானிலுள்ள இலங்கையர் குறித்து ஆராய திங்களன்று கொழும்பில் கூட்டம்

## 'பலஸ்தீனத்தின் நண்பர்' அமைப்பு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 28

இஸ்ரேலின் தாக்குதலுக்கு உள்ளாகிருக்கும் லெபனானில் உள்ள 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்களின் நிலைமையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும், அது பற்றி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்குமென கொழும்பு கொம்பனித் தெருவில் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

'பலஸ்தீனத்தின் நண்பர்' என்ற அமைப்பு இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

பல அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகளும், முக்கிய பிரமுகர்கள் சிலரும் ஒன்றிணைந்து இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர் எனத் தெரியவருகி றது.

இந்தக் கூட்டத்தில் பல முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர். இலங்கையர்களின் நிலை தொடர்பாக பல தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானிலுள்ள இலங்கையர்களின் உறவினர்களுக்காக கொழும்பு இல. 414/17, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தையில் தகவல் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

லெபனானில் கடமையாற்றும் இலங்கையர்களின் உறவினர்கள் 'டிறைகோ' களஞ்சிய நிலையத்திற்கு வந்து தமது உறவினர்கள் தொடர்பான தகவல்களை வழங்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)


**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

முகாமைத்துவ உதவியாளர்

சனி, ஞாயிறு 11.00 - 1.30

S.L.A.S மட்டுப்படுத்தப்பட்டது

சனி, ஞாயிறு 1.30 - 4.30

D.M.I ஆரியகுளம் சந்தி

**ராஜா** யாழ்ப்பாணம்

28 வரை

வடிவேல் (இருவேடம்), மனோரமா, நாசர், நாகேஷ்

இம்சை அரசன் 23ஆம் புலிகேசி

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

29 முதல்- ஜெயம்ரவி, திரிஷா

சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்

(சி-47139)

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

27.07.06 முதல் மாதவன் நடித்த

கேட்டவரெல்லாம் பாடலாம்

காட்சி நேரம் : 10.30, 2.30

(சி-49188)

**பிறந்தநாள் வாழ்த்து**

இன்று 60 ஆவது பிறந்தநாள் காணும் நீர்வேலியைச் சேர்ந்த

சமூகஜோதி த.பரராஜசிங்கம் (J.P)

அவர்களை நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

புத்தூர். அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம்.


# வடமராட்சிக் கல்விக் கோட்ட தமிழ்த்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை28

வடமராட்சி கல்வி வலயத்தின் கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய கல்விக் கோட்டப் பாடசாலைகளின் கோட்ட மட்ட தமிழ்த்திறன் போட்டிகள் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ளன.

கரவெட்டிக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நாளை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் -

பருத்தித்துறைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட் டிகள் நாளைமறுதினம் வடஇந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்போட்டிகளின் எழுத்தாக்கல் போட்டிகள் அடுத்தமாதம் ஐந்தாம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

# பருத்தித்துறை - கொடிகாமம் இடையே சரசாலை ஊடாக மீண்டும் பஸ் சேவை

தென்மராட்சி, ஜூலை 28

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடமையாற்றும் அலுவலர்களின் நலன்கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையினர் வடமராட்சிக்கும், தென்மராட்சிக்கும் இடையிலான பஸ் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

தினமும் பிற்பகல் 4.15 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்படும் பஸ் சாவகச்சேரி சரசாலை மார்க்கமாக பருத்தித்துறைக்குச் செல்லுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வல்வெட்டித்துறை அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களின் நலன் கருதி பிற்பகல் 4 மணிக்கு பருத் தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான 751ஆம் தட இலக்க பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

# இடமாற்றத்தை....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாகலிங்கம், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் குபேரநாதன், மயிலணி சைவ மகாவித்தியாலய தற்போதைய அதிபர் இரா.சிவனேசன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யாழ்.மேல்நீதிமன்றத்தின் எழுத்தாணை கோரித் தாக்கல் செய்யப்பட்ட அம்மனு நீதிபதி.சொ.தியாகேந்திரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டது. அப்போது மனுவை விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கும் படியும் - மேற்படி பிரதி வாதிகள் இவ் வழக்குத் தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் அடுத்த மாதம் 23 ஆம்திகதி நீதிமன்றில் தோன்றி ஆட்சேபனையைத் தெரிவிக்கும்படியும் நீதிபதி கட்டளை பிறப்பித்தார்.

இவ் வழக்கின் மனுதாரர் தரப்பில் சட்டத்தரணிஜெஜெயரூபனின் அனுசரணையுடன் சட்டத்தரணிவி.எஸ். நிரஞ்சன்ஆஜரானார்.

இவ்வாறான நிறைவேற்று நிர்வாக அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக இவ்வாறான வழக்குகள் மட்டக் களப்பு, திருகோணமலை மேல் நீதிமன் றங்களில் அதிக ளவு தாக்கல் செய் யப்ப டுகின்றன என் றும்-

யாழ். மேல் நீதிமறத்தில் கல்வி அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட சில வழக்குகளில் இது வும் ஒன்று என்றும் - நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


காரைநகர் பிரதேசசபை, காரைநகர்

## கேள்வி அறிவித்தல்-2006

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 07.08.2006 பி.ப 3 மணி வரை

கேள்வி பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 11.08.2006 பி.ப 12 மணிவரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி : 11.08.2006 பி.ப 12.30 மணிக்கு

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத்தரம் |
|---|---|---|---|
| சயம்பு வீதி புனரமைப்பு | 12000.00 | 575.00 | எம் 9 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட 'இக்ராட்' தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரம் இணை பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், காரைநகர் பிரதேசசபை, காரைநகர் என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சயம்பு வீதி புனரமைப்பு' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

காரைநகர் பிரதேசசபை,
காரைநகர்.
27.07.2006

இரா.லோகநாதன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேசசபை,
காரைநகர்.

(சி-50547)


# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

தென்மராட்சி பிரதேச செயலக ஒருங்கி ணைப்புக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல கிராம அலுவலர்களையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார். (202)

## எங்கள் இதயத் தெய்வத்திற்கு கண்ணீர் மலரால் காணிக்கை

எம்முடன் 04 - 03 - 1935



இறையடியில் 20 - 07 - 2004

**திருமதி இரத்தினம் கிருஷ்ணபிள்ளை**

திதி:திருதியை (28.07.2006)

குறைகள் எதுவுமின்றி குடும்பத்தில் நிறைவுடனே
சோகமே தெரியாது சொகுசாகக் காத்தீர்கள்
அம்மா உங்களுடன் ஐயாவும் பேர்த்தியுமாய்
அடுத்தடுத்துச் சோகங்கள் அணுவணுவாய் வாட்ட
ஆறிடமுடியாது ஆழ்ந்துவிட்டோம் துயரத்தில்
ஆத்மசாந்திக்காய் அனுதினமும் வேண்டுகின்றோம்.

*'லக்ஷ்மி வாசா'*
*மில் றோட்,*
*புலோலி தெற்கு, புலோலி* (52672)

*பிரிவால் துயருறும்*
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையர் செல்லையா

(சாரதி, சங்கானை)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஓடக்கரை வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லையா நேற்று (27.06.2006) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் சிவகுமாரன், மற்றும் திருச்செல்வம் (சுவிஸ்), செல்வராணி, பாலசுப்பிரமணியம் (கனடா), குலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, வசந்தி (சுவிஸ்), துரைராசா (ப.நோ.கூ.ச., தெல்லிப்பழை), ரேவதி (கனடா), மஞ்சு (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், அமரர் நல்லம்மா, மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், உஷாநந்தினி, சிவகரன், கிருபாஜினி, கீர்த்தனா, விமல்ராஜ், விமல்தாஸ், அபினவன், கெற்சிகா, நிந்துஜா, சுகந்தன், துரிகா, தீபிகா, சபீஷன், சஞ்சிகா, சஞ்செய் ஆகியோரின் அன்புப் பேரனும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஓடக்கரை வீதி,**
**சங்கானை**

*தகவல்:*
**மனைவி.**

## மரியதாஸ் மனோஜ்ராஜ்

சங்கானை வீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் மனோஜ்ராஜ் (ராசா) நேற்று (27.07.2006) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் குருசுமுத்து மரியதாஸ்- அல்போன்ஸா மனோகரி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், அனோஜன்ராஜ், மேரி அஜித்தா (மாணவி, யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிராஸ்க்கம்மா, காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், சௌந்தரம், புஸ்பராணி (கிளி), யோன்ராசா (யோன்), சந்தியாப்பிள்ளை ஆகியோரின் மருமகனுமாவார்.


அன்னாரின் இறுதிசடங்குகள் அச்சுவேலி புனித சூசையப்பர் சேமக்காலையில் நாளை (29.07.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கானை வீதி,**
**அச்சுவேலி.**

*தகவல்:*
**கு.மரியதாஸ் (தந்தை)**

## நடராசா சிவசுப்பிரமணியம் (தம்பிராசா)



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை பொற்கொல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவசுப்பிரமணியம் (தம்பிராசா) நேற்று (27.07.2006) அதிகாலை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பலீலாவதியின் பாசமிகு கணவரும், மல்லிகா, ரஞ்சிதமலர் (சுவிஸ்), சந்திரா (ஜேர்மனி), கோமதி, கமலேஸ்வரன், இராஜேஸ்வரன், சிவனேசன் ஆகியோரின் தந்தையும் விஜயராஜா, யோகராஜா (சுவிஸ்), நவகுமாரன் (ஜேர்மனி), ஜெயராஜா, செல்வவனஜா, ஜெயலதா, அமுதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.07.2006) வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் மகன் இராஜேஸ்வரன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சி.இராஜேஸ்வரன்**
**பூநாறி லேன்,**
**கொக்குவில் மேற்கு.**

*தகவல்:*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் தாக்குதல் தீவிரம்; 23 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

## ஐ.நா அமைதிப்படை அதிகாரிகள் நால்வரும் பலி

காஸா, ஜூலை28

பலஸ்தீனர்களின் காஸா பகுதியில் இஸ்ரேலிய ராணுவத்தினரின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. நேற்று நடைபெற்ற தாக்குதலில் ஒரு பெண் அவரது இரு பெண் குழந்தைகள் உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர்.

காஸா பகுதி மீது இஸ்ரேல் நடத்தி வரும் இத் தீவிரத் தாக்குதலை முடிவுக்குக் கொண்டு வர சர்வதேச சமூகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலஸ்தீன பிரதிநிதி சாயிப் கிரிகேட் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் லெபனான் மீது இஸ்ரேல் விமானங்கள் நடத்திய சரமாரியான குண்டு வீச்சில் ஐ.நா அமைதிப்படை அதிகாரிகள் 4 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷாரோனின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. இஸ்ரேல் பிரதமர் கடந்த ஜனவரி மாதம் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு ஜெருசலேமில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், தற்போது அவரது சிறுநீரகம் செயலிழந்துள்ளது. இதனால் அவர் அவசர சிகிச்சைப்பிரிவில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளார். ரத்தத்தில் உள்ள கழிவு நீரை அகற்ற டயாலிஸிஸ் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இருப்பினும், அவரது உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரியான முறையில் நடைமுறைப்படுத்த ஒரு கொள்கை அவசியம்.

இலங்கை நிலைமை இப்போது மோசமாகவுள்ளதை நாம் அறிவோம். இலங்கைப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை ஓரிருவரின் ஒத்துழைப்பால் சமாதானத்தை நிலைநாட்டுவது கடினம். மனிதஉரிமைகளைப் பேணுகின்ற ஓர் அமைப்பு என்ற வகையில் இலங்கையில் இடம்பெறுகின்ற மனிதஉரிமை மீறல்கள் குறித்து நாம் கவலை அடைகிறோம். இடம்பெயர்ந்தவர்கள் தங்களின் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றனர். இவர்களைக் குடியமர்த்த அனைவரும் உதவ வேண்டும். இதற்கப்பால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படவேண்டும். பேச்சைத் தொடங்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் சரியான முறையில் நடைமுறைப்படுத்த முறையான கொள்கை ஒன்று அவசியம்.- என்றார்.


**ஐடியல் அக்கடமி**

சீரணிச் சந்தி — சண்டிலிப்பாய்.

**A/L 2007, 2008**

**புதிய பிரிவுகள்**

**ஆரம்பம்: 05.08.2006 சனி காலை 8 மணி**

| | |
|---|---|
| தமிழ் | : V.M.லிங்கம், நாக. தமிழிந்திரன் |
| இ.நாகரிகம் | : T.ஸ்ரீஸ், P.சந்திரன் |
| அளவையியல் | : E.S.பவன் |
| நாட. அரங்கியலும் | : P.கணேஸ் |
| புவியியல் | : N.S.சங்கர் |
| அரசியல் | : K.சுகாஷ் |
| பொருளியல் | : S.ஜெயக்குமார் |
| பொது ஆங்கிலம் | : திருமதி.யோகா |

குறிப்பு: இவ்வாசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை யாழ். ஐடியலிலும் நடைபெறுகின்றது.

V.N.பத்மநாதன்
நிர்வாகி.


## ராஜீவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசு கவனத்தில்கொண்டுள்ளது என்று கடந்த புதன்கிழமை மக்களவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோது அகமட் கூறினார். ''இலங்கையில் அமைதி ஏற்படுத்துவ தற்கான முயற்சியில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று பாலசிங்கம் குறிப்பிட்டி ருந்ததையும் அரசு கவனத்துக்கு எடுத்துக்கொண்டுள்ளது'' என்றும் அவர் குறிப்பிட் டார்.

எனினும், விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தொடர்ந்தும் தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருந்து வருகிறது. ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் புலிகளின் தலைவர்கள் குற்றவாளிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளனர்'' என்றும் இணை அமைச்சர் அகமட் சுட்டிக்காட்டினார்.

இப்படி அந்த நாளிதழின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

## பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலியைச் சேர்ந்த மரியதாஸ் -மனோஜ்ராஜ் (வயது-22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினார். பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-11-13-15-86-190-203)

## புலிகளின் பிரதேசங்கள் மீது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் இருந்த போராளிகளில் 6 பேர் கொல்லப்பட்டனர் என்றும், வேறு ஐந்து போராளிகளுக்குப் படுகாயங்கள் ஏற்பட்டன என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் பொதுமக்கள் சிலரும் காயமடைந்தனர் என்றும் குடியிருப்புகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டன எனவும் தகவல்கள் தெரிவித்தன.

திருகோணமலையில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் சேருவிலவில் விவசாய நிலங்களுக்கான ஆற்று நீர் விநியோகத்தைப் புலிகள் தடைசெய்து விட்டனர் எனக் குற்றஞ்சாட்டும் அரசுத் தரப்பு, அதற்குப் பதிலடியாகவே புலிகளின் பிரதேசங்கள் மீது வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

ஆற்று நீரைப் புலிகள் தடுத்து நிறுத்தியிருப்பதாகக் கூறப்படும் மாவிலாறு, வெருகல் ஆறு பிரதேசங்கள் மீதே முதலில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதன் பிறகு நேற்றுக் காலை 9.00 மணியளவில் வடக்கில் - வன்னியில் - முல்லைத்தீவு நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் மீதும் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. இந்தப் பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புகள் மீது குண்டுகள் வீழ்ந்துள்ளன. எனினும், உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

மாவிலாறு, வெருகல் ஆறு பிரதேசம் மீது புதனன்று விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

திருமலை கடற்படைத் தளத்துக்கு வடக்கே அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் விமான இறங்கு தளத்தை இலக்கு வைத்து நேற்றைய இரண்டாம் நாள் வான் வழித் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை -

சேருவில பகுதிக்கான ஆற்று நீர் விநியோகத்தைப் புலிகள் தடுத்து நிறுத்தியிருக்கும் - துருசு அமைந்துள்ள பிரதேசத்துக்கு - தரை வழியாகப் பொறியியலாளர் குழு ஒன்றை அனுப்புவதற்கு முன்னோடியாகவே அப்பகுதியில் இனங்காணப்பட்ட புலிகளின் நிலைகள் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அமைச்சரும், பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளருமாகிய கெஹலிய ரம்புக்வல முதலில் தெரிவித்தார். எனினும், நேற்றைய இரண்டாம் நாள் தாக்குதல்கள் புலிகள் அமைத்துள்ள விமான ஓடுதளங்கள் மீதே நடத்தப்பட்டன என்று அவர் கூறினார்.

''புலிகள் புதிதாக அமைத்துவரும் விமான ஓடுபாதைகளை இனங்கண்டு அவற்றின் மீதே துல்லியமாக குண்டுகள் வீசப்பட்டன. அவை (புலிகளின் விமான தளங்கள்) நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு மட்டுமல்ல. இந்தப் பிராந்தியத்துக்கே அச்சுறுத்தலானவை. எனவேதான் அவற்றின் மீது இலக்கு வைக்கப்பட்டது.'' - என்று ரம்புக்வெல தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாகச் செல்லும் மாவில் ஆற்றின் கால்வாய்களைத் திறந்துவிடப் புலிகள் மறுத்துள்ளதால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிங்களவர்களுக்குச் சொந்தமான பெருமளவு விவசாயப் பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து, இந்தச் சிக்கலில் புலிகளை வழிக்குக் கொண்டு வருவதற்கான ஓர் உபாயமாக இந்த வான் தாக்குதல்களை அரசு மேற்கொண்டுள்ளதாக கொழும்பில் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். எனினும், ஆற்று நீர் விவகாரத்தில் கண் காணிப்புக் குழுவின் உதவியோடு பேச்சு மூலம் இணக்கம் ஒன்றை எட்டுவதை விடுத்து வலிந்து வான் தாக்குதல் நடத்தும் யுத்த வழிமுறையை அரசு நாடியிருப்பது குறித்து கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் ராஜதந்திரிகள் மட்டத்தில் பெரும் கவலை எழுந்துள்ளது. (ஐ)

## யாழ். நகரில் மனோகராச் சந்தியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலைவேளை, தங்கள் அலுவல்களுக்காக அந்த வீதிக்கு வந்த யாழ்.இந்துக்கல்லூரியி உபஅதிபர் எஸ். கிருஷ்ணகுமார் (வயது-59) மற்றும் அந்தப் பகுதியில் வசிக்கும் பி. பாலசுப்பிரமணியம் (வயது-55) ஆகிய இருவரும் காயமடைந்தனர். இவர்கள் இருவரும் கிளைமோர் சிதறல்களில் சிக்கிக் காயமடைந்தனரா அல்லது படையினரின் வேட்டுக்கு இலக்காகினரா என்பது உறுதிப்படுத்தப் படவில்லை.

தாக்குதலினால் கலவரமடைந்த படையினர் வீதியில் எதிர்ப்பட்டவர்களை வழிமறித்துத் தாக்கினர்.

சாவகச்சேரி கெற்பெலியைச் சேர்ந்த இராமநாதன் ரவீந்திரன் (வயது-24), காரைநகர் - களபூமியைச் சேர்ந்தவர்களான கந்தசாமி தயாபரன் (வயது-23), சுப்பிரமணியம் புண்ணியமணியம் (வயது-47) ஆகிய மூவரும் அடிகாயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்த அனைவரும் யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

காலைவேளை நகரப்பகுதிக்கு வந்து கொண்டிருந்த பாடசாலை மாணவர்களும், அரச ஊழியர்களும் பெரும் பதற்றமடைந்து அங்கும் இங்குமாக ஓடியதைக் காண முடிந்தது.

இந்தச் சம்பவத்தால் காங்கேசன் துறை வீதி ஊடான போக்குவரத்துகள் நீண்ட நேரம் தடைப்பட்டிருந்தன.

(ஐ-1-15-86-190-203)


**SPOKEN ENGLISH**

*BY: BRITTO*

**புதிய பிரிவு**

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம் : 29.07.2006 (சனி)

நேரம் : மாலை 5 மணி

இடம் : சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்

உள்ள 17, பிளைச்சர் வீதி,

(சர்வோதயம் அருகில்)


# மரண அறிவித்தல்

## வ.யோசேப்பு அருமைநாயகம்

(இளைப்பாறிய அதிபர்)

நாக்கியம்புலம், சூராவத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வ.யோசேப்பு அருமைநாயகம் அவர்கள் நேற்று (27.07.2006) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியை சின்னத்திரேசாவின் அன்புக் கணவரும் திருமதி.க.பற்றிமா, ஜெயசீலி, காலஞ்சென்ற மரியநாயகம், ஜெயநாயகம் (கணக்காளர், பற்றீசியன் நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பே.கருணைநாயகம் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), திருமதி.கொண்சி ஜெயநாயகம் (ஆசிரியை, புனித அந்தோனியார் பாடசாலை, பாஷையூர்) ஆகியோரின் அன்பு மாமனும் அரவிந்தன் (நீர்ப்பாசனத் திணைக்களம்), திருமதி. அ.ஜெனிற்றா (ஆசிரியை, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), யூட் (கிழக்குப் பல்கலைக்கழகம், 4ஆம் வருடம்), அலன் (யாழ்.பல்கலைக்கழகம், 4ஆம் வருடம்), விஜி, றிவி, டனுஷன், டனுஷினி, டனுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.07.2006) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் சூராவத்தை புனித திரேசா ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
**யோ.ஜெயநாயகம்.**
**(மகன்)**

சூராவத்தை,
சுன்னாகம்.

(சி/50543)


INDIAN INSTITUTE OF BANKING & FINANCE

*In Collaboration with*

X-PERTISE LIMITED

*Offers*

**Diploma In Banking**

At JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT

INDIAN INSTITUTE OF BANKING & FINANCE MUMBAI - INDIA

X-PERTISE LTD

*Bringing into REALITY your DREAM DESTINY in BANKING.....*

MBA at Indira Gandhi National Open University

Diploma in Banking Studies

Intermediate Certificate in Banking Studies

FURTHUR DETAILS
DIRECTOR
Jaffna College
Undergraduate Dept
464, Hospital Road,
Jaffna

**SUBRA (14)**

சித்தன்கேணி

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கு

யாழ். பிரபல ஆசிரியர்

அன்பழகன்

ஆரம்பம் : 30.07.2006 ஞாயிறு காலை 9 மணி

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ மாதிரி வினாத்தாளும் அச்சடித்த பாடக்குறிப்பும் வழங்கப்படும்.

A/L Day மாணவர்களுக்கான பிரத்தியேக தமிழ் வகுப்பு

நாக.தமிழிந்திரன்

திங்கள் - புதன். 3-5 நடைபெறும்.

**SPECIAL ENGLISH CLASS GRAMMAR & SPOKEN**

100 மணித்தியாலங்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க கற்கலாம். தினசரி வகுப்புகள், அச்சடித்த பாடங்கள், A/L பரீட்சைக்குத் தோற்றியவர்கள், உள்நாட்டில், வெளிநாட்டில் உயர்கல்வி பெற, தொழில் வாய்ப்புப் பெற உகந்த கல்வி.

*Lectures By : Mr.A.RAJAGOBALAN - Mr.B.RUBAN*

ஆரம்பம் : 30-31 July 2006

JAFFNA TECHNICAL INSTITUTE
No : 07, Palaly Road, Jaffna.

**DIPLOMA IN AutoCAD**

பொறியியல்பீட, தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கானது

Start on : 29, 31.07.06

Head Office :- 43, Arasady Rd, Thaddatheru Junction, Jaffna.
Branch :- 55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170, 0777846811

EXPOAIR — எக்ஸ்போ ஏயார்

your friend in the skies... — வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888

கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.